# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 10 திங்கட்கிழமை (23-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:148


## ஆனையிறவு வெற்றி நாள் இன்று; வன்னி எங்கும் எழுச்சி நிகழ்வுகள்

வவுனியா,ஏப்.23

யாழ்.குடாநாட்டின் நுழைவாயில் பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்காப் படையினரின் ஆனையிறவுப் பெரும் தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியடைகிறது.

ஆனையிறவு தளத்தைக் கைப்பற்றி அங்கு புலிக்கொடியை ஏற்றிய வெற்றித் திருநாளை வன்னியில இன்று பெரும் எழுச்சி நிகழ்வாக கொண்டாடுவதற்கு விடுதலைப் புலிகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக அங்கிருந்து வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்சமர் நடந்த பகுதியில் இரசாயனப் பொருள் மீட்பு!

### புலிகள் கடத்தி வந்தவையா?

கொழும்பு,ஏப்.23

கடந்த 15ஆம் திகதி முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் கடற்புலிகளுடன் கடற்சமர் இடம் பெற்ற பகுதியில் இருந்து சந்தேகத்துக்கிடமான இரசாயனப் பொருள் அடங்கிய சிறிய கொள்கலன்கள் இரண்டு மீட்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சண்டை நடைபெற்ற பகுதியில் இருந்து இலகு ரக விமானங்களை இயக்குவதற்குப் பயன்படுத்தக் கூடிய எரிபொருள் (Hi-Octane Fuel) பரல்கள் மீட்கப்பட்டிருப்பதாக ஏற்கனவே தகவல் வெளியாகி இருந்தது.

அவற்றை விட சுமார் 250 கிராம் எடையுடைய இரண்டு கொள்கலன்களில் பவுடர் போன்று காணப்படும் இரசாயனப் பொருள்களும் மீட்கப்பட்டிருப்பதாக 'சண்டே ரைம்ஸின்' பாதுகாப்பு செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இராசனப் பொருள் அடங்கிய கொள்கலனில் காணப்படும் லேபலில் 'டலிலின் டைசோசயனைட்' (Talilin Diisocyanate) என்று பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும்-

ஜப்பானில் ரகெடா (Takeda) என்னும் கம்பனியில் அந்த இரசாயனப் பொருள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரியிடம் உயிருடன் பிடிபடுவதைத் தவிர்ப்பதற்காகப் புலிகள் பயன்படுத்தி வரும் சயனைற் வில்லைகளைத் தயாரிக்க இந்த சயனைற் ரக இரசாயனப் பொருளைப் புலிகள் பயனபடுத்திவருகின்றனரா என்ற சந்தேகம் பாதுகாப்பு வட்டாரங்களில் ஏற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்த நீடிப்பு முடிவை புலிகள் தரப்பு மறுபரிசீலனை?

## 4 மாதகாலம் நாளையோடு பூர்த்தி

லண்டன்,ஏப்ரல்23

**தமது ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பது என்ற முடிவை விடுதலைப் புலிகள் மறுபரிசீலனை செய்யக் கூடும் என்று லண்டன் செய்தி வட்டாரங்களில் நேற்று இரவு பரபரப்பாகப் பேசப்பட்டது. அனேகமாக யுத்த நிறுத்தம் இம்முறை நீடிக்கப்படமாட்டாது என்றே அவ் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் நான்கு மாதகால யுத்த நிறுத்தம் நாளை நள்ளிரவுடன் முடிவடைகிறது. தங்கள் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிப்பதா இல்லையா என்ற முடிவை அவர்கள் இன்று வெளியிடுவர் என்று கருதப்படுகிறது.

யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கவுள்ளதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கடந்த புதன்கிழமை தம்மைச் சந்தித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்திருந்தார்.

எனினும் விடுதலைப் புலிகளின் வன்னியில் உள்ள ஆணையின் அந்த முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று தலைமைப்பீடத்திடம் வற்புறுத்தி வருவதாக விடயமறிந்த தரப்புகள் கூறியதாக லண்டனில் செய்தி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

எரிக் சொல்ஹெய்ம் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசிய பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் கடற்புலிகள் மீது நடத்தப்பட்ட கடும் தாக்குதல்; அவர்களில் எட்டுப்பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் -

யுத்த நிறுத்த காலத்தில் படையினரின் தாக்குதல்களால் போராளிகள் கொல்லப்படுவதனால் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் மனத்தளர்வு -

யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி விமானப்படையினர் தீவிரமாக விமானத் தாக்குதல்களை நடத்தி வருவதும் -

யுத்த நிறுத்தத்தைத் தமக்கு சாதகமாக்கிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசு காலத்தை இழுத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பகுதியில் புலிகள் பெரும் ஆயுதக் குவிப்பாம்!

### பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சம்

கொழும்பு,ஏப்.23

வன்னியில் புலிகள் பெரும் ஆயுதக் குவிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கப்பல்கள் மூலம் பெருமளவு ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இறக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அண்மையில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று முல்லைத்தீவு சாலைக் கடற்பகுதியில் இடம்பெற்ற கடற்சண்டையின் போது கைது செய்யப்பட்டுத் திருமலைக்குக் கொண்டு செல்லப்பட்ட புலிகள் இயக்கப் போராளிகள் ஒன்பது பேரையும் கடற்படையினர் விசாரணை செய்த சமயம் புலிகள் ஆயுதக் குவிப்பில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பெரும் எண்ணிக்கையான லொறிகள், டிரக்குகள் மூலம் ஆயுதங்கள் நகர்த்தப்பட்டு வருவதை அவர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு ~ புலிகள் நேரடிப் பேச்சு விரைவில் என்கிறார் அநுருத்த

கொழும்பு,ஏப்.23

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரைவில் 'நேரடிப்' பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடத்தில் விடுதலைப் புலிகள் ஆனையிறவையும் மற்றும் தென்மராட்சிப் பிரதேசத்தையும் கைப்பற்றினர் எனினும் படையினர் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகளினால் தென்மராட்சிப் பிரதேசம் மீளக் கைப்பற்றப்பட்டது.

புலிகள் பலவீனமான நிலையில் உள்ளனர். அவர்கள் ஆள்பலமும் ஆயுதபலமும் இன்றி உள்ளனர் - என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-3-9)

## முல்லைக் கடற்சமரின் போது கைதான புலிகள் 8 பேரும் விசாரணைக்காக ஒப்படைப்பு!

கொழும்பு,ஏப்.23

முல்லைத்தீவு சாலை கடற்பகுதியில் கடந்த வெள்ளியன்று கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற கடற்சமரின் போது படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் எட்டு உறுப்பினர்களும் இன்று தேசிய புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

சிற்றம்பலம் துஷ்யந்தினி (வயது 16), தங்கையா விஜயலலிதா (வயது 14), விஜயரத்தினம் சுதர்சினி (வயது 19)

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் செயற்குழு இன்று முக்கிய கூட்டம்

கொழும்பு,ஏப். 23

ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை வெளியேற்றுவதற்கு கட்சிக்குள் ஒரு சாரார் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள சூழ்நிலையில் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் கூடவுள்ள செயற்குழு ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் என்று கட்சியின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் பதவியில் ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது அவரது இடத்துக்கு கரு ஜெயசூரியவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடற்படையினருக்கு பங்களாதேஷில் இலவச பயிற்சி

### அந்நாட்டுப் பிரதமர் இணக்கம்

கொழும்பு,ஏப்.23

ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரிகளுக்கு இலவசமாகப் பயிற்சிகளை வழங்க பங்களாதேஷ் முன்வந்துள்ளது.

கடந்த வாரம் பங்களாதேஷுக்கு விஜயம் செய்த கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பங்களாதேஷ் பிரதமர் பேகம் ஷெய்க் ஹசீனாவுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த விவரம் வெளியிடப்பட்டது.

கடற்படை அதிகாரிகளுக்கு பயிற்சிகளையும் தேவையான வேறு உதவிகளையும் வழங்க பங்களாதேஷ் இணங்கி உள்ளது.

அதிகாரிகளுக்கான பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும். பங்களாதேஷில் தங்கி இருந்து பயிற்சி பெறவுள்ள கடற்படை அதிகாரிகளுக்கான தங்குமிட செலவுகளை மட்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றிரவு சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 10.00 மணியளவில் கோப்பாய் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இனம் காண்பதற்காகவும் மரண விசாரணையின் பொருட்டும் இந்தச் சடலம் யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

### எல்லைப்படை உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,ஏப்.23

வடமராட்சி தாளையடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் சிறப்பு எல்லைப் படையைச் சேர்ந்த லெப்டினன்ட் வண்ணன் (ஆறுமுகம் தயாநேசன், யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

### ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு,ஏப்.23

ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய கையோடு சிரேஷ்ட அமைச்சர்களுடன் நேற்று அவர் பலதரப்பட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

### விதவைப்பெண் தாக்கப்பட்டார்

மட்டக்களப்பு,ஏப்.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் விதவைப்பெண் ஒருவர் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி மயக்கமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவற்குடாவைச் சேர்ந்த மகேந்திரன் நாகேஸ்வரி (வயது-37) என்ற விதவைப் பெண்ணே தாக்குதலுக்கு இலக்காகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-3)

### இத்தாலிக் கடலில் அகதிகள் கப்பல் சிக்கியது

லண்டன்,ஏப்.23

900 க்கும் அதிகமான சட்ட விரோத குடியேற்ற வாசிகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று இத்தாலி கடற்பகுதியில் வைத்து வழிமறிக்கப்பட்டு அந்நாட்டின் தென்பகுதித் துறைமுகம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

கப்பலில் கர்ப்பிணிப் பெண்களும் குழந்தைகள் பலரும் இருப்பதாகக் கூறப்பட்டது. இவர்கள் எந்த நாட்டவர்கள், எங்கிருந்து புறப்பட்டனர் என்பன போன்ற விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

### முகமாலையில் ஷெல் வீச்சு

கொழும்பு,ஏப்.23

கொடிகாமத்துக்கு வடக்கே ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் முகமாலை, கரம்பைக் குறிச்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள படை நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் சிறுகாயத்துக்கு உள்ளானதாகவும் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3-9)

# இரண்டாவது ஆண்டு நினைவு



**Dr. சிவஞானம் கனகரத்தினம்**
D.A.M.(Cey.)L.M.S. (Madras) Gold Medalist

தோற்றம்: 16-07-1917 மறைவு: 23-04-1999

**திதி: சித்திரை பூர்வ பக்ஷ நவமி**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் நின்று வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும் எங்கள் இதயங்களில் எந்நேரமும் நினைவுகளில் நீங்காமல் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

*இரத்தின வைத்தியசாலை,*
*உடுப்பிராய்.*
(86900)

-மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## லஷ்சுமி இணுவில்

3ஆவது கடைசி வாரம்
பிரசாந்த், சிம்ரன், கரண்
நடிப்பில்

**கண்ணெதிரே தோன்றினாள்**

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)
அடுத்த வெளியீடு
**வாஞ்சிநாதன்**

(86974)

---

## நாகம்ஸ்
சுன்னாகம்

விஜய், சிம்ரன், விவேக்
நடித்த

**ப்ரியமானவளே**

(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)

(86952)

---

## ராஜா யாழ்ப்பாணம்

கார்த்திக், லைலா
மற்றும் பலர் நடிப்பில்

**ரோஜாவனம்**

காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
27.04.2001 முதல் அஜித்தின்
**தீனா**

(C/16333)

---

# 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

23-04-2001




## செல்வி சுரேஸ் மீனஹர்னி

யாழ்.நாவலர் வீதியைச் சேர்ந்த
திரு.திருமதி சுரேஸ் - நித்தியகலா தம்பதிகளின்
செல்வப்புதல்வி மீனஹர்னி இன்று (23-04-2001) திங்கட்கிழமை தனது 2 ஆவது பிறந்த நாளை டுபாயில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தம்பி மீனலக்ஷ்ஷன், பெரியப்பாமார் மற்றும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இருக்கும் அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமாமார், அத்தைமார், அன்ரிமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி மீனஹர்னியை யாழ்.ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

தகவல்:-
*ரவி மாமா*
(C/16403) *சுப்பஸோ வீடியோ, யாழ்ப்பாணம்.*

---

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

2001 ஜனவரியிலிருந்து பட்டதாரி பயிலுநர் நியமனம் கிடைத்தும் இதுவரை கடமையைப் பொறுப்பேற்காதவர்கள் நியமனக்கடிதத்துடன் உடனடியாகச் சந்திக்கவும்.

இடம்:- புதிய உயர் கல்விக்கல்லூரி, ஆரியகுளம்.
காலம்:- 24.04.2001 (செவ்வாய்) காலை 10.00 மணி

(86971) - தலைவர்.

---

# தினேஸ் * மானிப்பாய்

மானிப்பாய் வாழ் மக்களுக்கு ஒரு நற்செய்தி!

### 1. தினேஸ் கொமினிக்கேசன்

தினேஸ் தொலைத்தொடர்பகத்தின் மற்றுமொரு சேவை மானிப்பாய் மண்ணில் முதற்தடவையாக இன்றுநெற். ஈமெயில் சேவையினை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஈமெயில் முகவரி:- sthinesh@ eureka.lk

குறைந்த சேவைக்கட்டணத்துடன் நிறைவான சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.

**எமது ஏனைய சேவைகள்**

- உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள்
- போட்டோ பிரதி
- பக்ஸ்
- கம்பியூட்டர் ரைப்பிங்

### 2. தினேஸ் வெதுப்பகம்

யாழ்மாவட்ட விற்பனையாளர்களுக்கு தினேஸ் வெதுப்பக உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம்.

விற்பனை செய்ய விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப இறுதித்திகதி 30-04-2001 விண்ணப்பங்களின் தெரிவு எம்மால் மேற்கொள்ளப்படும்.

எமது உற்பத்திகளில் சில:

1. பாண், ஸ்பெஷல் பாண்
2. பனிஸ்
3. கேக்வகைகள்
4. பேஸ்ரி
5. டோநட்
6. பேபி றஸ்க்
7. றஸ்க்
8. மடத்தல்
9. றஸ்க் தூள்

ஓடர் கொடுத்து 3 மணிநேரத்தில் பேஸ்ரி, கேக்வகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:**
எம்மிடம் கணனி விற்பனைக்குண்டு.
Intel Pentium III 667 MHz org. With Moderm and UPS.

தொடர்புகளுக்கு: தினேஸ் வெதுப்பகம்,
180,யாழ்.வீதி, மானிப்பாய்.
T.Phone:- 021-2570, 021-3297 Fax:- 021-2570

(86950)

---

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 17 - 01 - 1973
மறைவு 03 - 05 - 2000

## செல்வன்
## கிருஷ்ணபிள்ளை ரகுராஜா

அன்பிலுயர் பண்பினொளித் தீபமாகி
ஆற்றலிலும் சிறந்துவளர் செல்வனாகி
இன்பமது கானலெனக் கடல்கடந்து
இனிமையுற எங்களுடன் இருந்தபோதும்
சின்னமென உன்நினைவை எம்முள் வைத்தும்
சிறுவயதில் உமையழைத்தா னென்றே நீயும்
பொன்னான உன்னுடலை மண்ணில் வைத்தோர்
ஆண்டதுதான் போனதெனக் கண்டே - இன்றும்
உன்நினைவில் எம்மனது கலங்கிநிற்க
உனைநினைந்தே அஞ்சலித்தோம்

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!*

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.*
(86973)

பெற்றோரும்
சகோதரரும்.

யாழ். மாணவருக்கான இலவச பாடநூல் விநியோகம்

# அதிபர் சங்கம் வெளியிட்ட குற்றச்சாட்டு

# விசமத்தனமானது என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாண மாணவர்களுக்குரிய இலவச பாட நூல்கள் அவர்களுக்கு வழங்கப்படாமல் 'பாதுகாப்பாக' வைக்கப்பட்டிருப்பதாக வடமாகாண அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தவறானது மட்டும் அன்றி விஷமத்தனமானதுமாகும்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'யாழ். வந்து சேர்ந்த பாட நூல்களை விநியோகிப்பதில் தாமதம் ஏன்?'' என்று தெரிவித்து வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் க. இராஜதுரை விடுத்த அறிக்கைக்குப் பதில் அளித்து நிலைமையை விளக்கி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

இவ்வாண்டுக்குரிய முதற் தொகுதிப் பாட நூல்கள் 204,899 கடந்த வருடம் டிசெம்பர்மாதம் 14ஆம் திகதி கிடைத்தன. இரண்டாவது தொகுதியில் 273059 நூல்கள் கடந்த பெப்ரவரி மாதம்6ஆம் திகதி கிடைத்தன. தவறுதலாக அனுப்பப்பட்ட சிங்கள, இஸ்லாம்சமய நூல்கள் 22075 தவிர, 455883 நூல்கள்ஐந்து கல்வி வலயங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு விட்டன.

மூன்றாவது கட்டத்தில் 479 பொதிகள் கடந்த 11 ஆம் திகதி கிடைத்தன. மிகுதி 1271 பொதிகள் கடந்தவெள்ளிக்கிழமை வரை கப்பலில் இருந்து இறக்கப்படவில்லை என்பதை சிவில் இணைப்பு அதிகாரி உறுதிசெய்துள்ளார். நானும் அவரும் இதுகுறித்துக் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபடியே இருந்தோம்.

நூல்கள் விநியோகிக்கப்படாது பூட்டி வைக்கப்பட்டுள்ளதாக விஷமத்தனமான அறிக்கை அச்சேறிக் கொண்டிருந்த நாளன்று மாலை 6.30 மணிக்கே 1271 பொதிகள் லொறி மூலம் கோப்பாய்க்கு எடுத்துவரப்பட்டன.

மூன்றாம் கட்டத்துக்குரிய முழுப் பொதிகளும் வந்துசேர முன்பே, விநியோகம் தொடங்கியிருக்க வேண்டும் என்று திரு. இராசதுரை எதிர்பார்க்கிறாரா? யாழ். மாவட்டத்தில் தான் நூல் விநியோகம் செய்து முடியவில்லை என்று நிலைநாட்ட முனையும் சக்திகளுக்குத் துணைபோகிறவர்கள், போக்குவரத்துப் பிரச்சினை இல்லாத தென்மாகாணத்துக்கும், மலைநாட்டுக்கும் கூட, நூல்விநியோகம் செய்து முடியவில்லை என்பதை உணர்வது நல்லது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மறுநாள் பார்த்து, நூல் விநியோகம் சீராக நடைபெறவில்லை என்று நிரூபிக்க விழையும் அதிபர் சங்கத் தலைவர், யாழ். மாவட்டத்துக்கான இணைப்புப் பணிமனைக்கு தொலைபேசி, தொலைநகல் முதலிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் எமது பிள்ளைகளுக்கு நூல் வழங்குவதில் நாம்படும் சிரமங்களையும் உணர்ந்து கொள்வது நல்லது —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம். ஏப். 23

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ஆர். ராஜ்குமார் வெற்றிக்கிண்ணத்துக்காக ஆர். வசந்தகுமாரின் அனுசரணையுடன் வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4-00 மணி— ஜொலிஸ்ரார் வி. க. 'ஏ' அணி எதிர் ஓல்ட்கோல்ட்ஸ் வி. க. அணி.

★ பிற்பகல் 5-00 மணி— யாழ். பல்கலைக்கழக வி. க. 'புளூஸ்' அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. 'பி' அணி

★ ★ ★

இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை ஏற்பாடு செய்துள்ள வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3-30 மணி— சுண்டிக்குழி வி. க. 'பி' அணி எதிர் கிறாஸ் கோப்பர்ஸ் வி. க. அணி.

★ பிற்பகல் 4-30 மணி— ஜொலிஸ்ரார் வி. க. அணி எதிர் மக்கள் வங்கி வி. க. அணி.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம் பெறும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 2-30 மணிமுதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு.-

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்**

★ 17 வயது — இணுவில் மத்திய கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

★ 19 வயது— உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி.

**யாழ் சென்ரலில்**

17 வயது — ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி எதிர் நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தி.

★ 19 வயது — ஆவரங்கால் மகாஜனா வித்தி. எதிர் ஹாட்லிக்கல்லூரி.

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையில் இடம் பெற்றுவரும் வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணி முதல் நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;-

**15 வயதுப் பிரிவு**

★ சுண்டிக்குழி மகளிர் கல்லூரி எதிர் யாழ்ரன் கல்லூரி.

★ இராமநாதன் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்து ம.வி.

**17 வயதுப் பிரிவு**

★ கனகரத்தினம் ம. வி. எதிர் டிறிபேர்க் கல்லூரி.

★ யூனியன் கல்லூரி எதிர் வேம்படி மகளிர் கல்லூரி.

★ சண்டிலிப்பாய் இந்து ம.வி. எதிர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

★ யூனியன் கல்லூரி எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ மெதடிஸ்த மகளிர் கல்லூரி எதிர் வேலணை துறைசாமி ம.ம.வி

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் வேம்படி மகளிர் கல்லூரி. (ஐ-3)

★ ★ ★

நல்லூர்ப் பிரதேச சபையினால் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையேயான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகிசனசமூகநிலையமும் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையமும் மோதுகின்றன. (க-86)

## காணாமற் போன 22 பேரின் விசாரணைக்கு உறவினர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென புலனாய்வுப் பிரிவினர் மேலும் 22 பேரின் பெயர் விவரங்களை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை பொலீஸ் நிலையங்களில் நடைபெறவுள்ள இந்த விசாரணைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள 22 பேரின் உறவினர்கள் அல்லது அவர்கள் தொடர்பான தகவல் அறிந்தோர் சமூகம் தருமாறு குற்றப் புலனாய்வுப் பொலீஸார் கேட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டோர் பொலீஸ் நிலையம் ரீதியாக வருமாறு:

**யாழ்ப்பாணம்**

★ துரைசிங்கம் – செந்தில்நாதன், இல. 6, வில்வத்தெரு வீதி, அரியாலை.

★ தர்மராஜா – ரமேஸ்கரன், கனகரட்ணம் வீதி, அரியாலை.

★ கந்தையா அருள்தரன், வைரவர் கோயில் வீதி, அரியாலை.

★ சின்னத்துரை - செல்வநாதன், சரசாலை வடக்கு.

★ தனபாலசிங்கம் கிருஷ்ணசிங்கம், கோப்பாய்.

★ கந்தசாமி - ராஜ்குமார் பெரிய அரசடி, சாவகச்சேரி.

★ கந்தையா – கந்தசாமி 8 ஆம் குறுக்குத்தெரு, யாழ்.

★ காசிப்பிள்ளை -கேதாரநாதன். கே. கே. எஸ். வீதி, யாழ்.

★ பரராஜசிங்கம் – குகேந்திரன், வைமன் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்.

★ கோபாலபிள்ளை- ஜெயசீலன், மாதா விநாயகர் வீதி, நல்லூர்.

★ சந்திரசேகரன் - லோகேஸ்வரன், கைதடி கிழக்கு.

★ சித்தியன் - பொன்னம்பலம், கைதடி வடக்கு.

இந்த 12 பேரின் உறவினர்களையும் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு சமுகம் தருமாறும்—

**பருத்தித்துறை**

★ குணரட்ணம் - விஸ்வராஜா, புலோலி மேற்கு.

★ நவரட்ணம் - குறக்கால் கோணேஸ்வரன் பிள்ளையார் கோயிலடி, தும்பளை.

★ ஆனந்தன் - ராஜகுலசிங்கம், தும்பளை.

★ அப்புலிங்கம்- தேவலிங்கம் ஆதி கோயிலடி வல்வெட்டித்துறை.

ஞானசேகரம் கிருஷ்ணவிங்கம் சென்லூட்ஸ் லேன், தும்பளை ஆகிய 5 பேரின் உறவினர்களையும் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்திற்கு வருமாறும் —

**சுன்னாகம்**

★ நாகலிங்கம் ஆறுமுகம்- சரவணாநாதன், புலோலி வடக்கு.

★ கந்தையா - திவாகரன் தொல்புரம் மத்தி.

★ இராசலிங்கம்-நாசநீலன் சாவற்காடு சுதுமலை.

★ அருந்தவராஜா- செல்வரட்ணம் இளவாலைக் கிழக்கு.

★ குணரட்ணம் - செல்வரூபன் இளவாலை.

ஆகிய 5 பேரின் உறவினர்களையும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறும் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் அறிவித்துள்ளனர். (க-4)

## விபத்தில் குடும்பஸ்தர் காயம்

நெல்லியடி, ஏப். 23

மோட்டார் சைக்கிள்— லொறி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் இடம் பெற்றது.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை தர்மகுலசிங்கம் (வயது 38) என்பவரே இவ்விபத்தில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-119)

## நாளை கூட்டம்

காரைநகர், ஏப். 23

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-73)

## இன்று முதல் நிவாரணம்

தென்மராட்சி, ஏப். 23

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் நிவாரணப் பொருள்களைப் பெற்றுவரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள மக்களுக்கான ஏப்ரல் மாத நிவாரண உலர் உணவுப் பொருள்கள் இன்று தொடக்கம் வழங்கப்படுமென சங்கப் பொது முகாமையாளர் இ. தேவகுமார் அறிவித்துள்ளார். (ஐ-117)

## அபிவிருத்திச் சங்க வெற்றி விழா ஏற்பாடு

காரைநகர் கோவளம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெள்ளி விழாகொண்டாடப்படவுள்ளது.

வெள்ளிவிழாவை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களிடையே பொதுஅறிவுப் போட்டி மற்றும் விளையாட்டுப்போட்டிகளை நடத்தவும் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் புனரமைக்கப்பட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்த வெற்றிவிழா நிகழ்வுகளை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சங்க முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர். (க-73)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்) வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மே மாதம் 6 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் சித்திரா பூரணையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க)

★ ★ ★

காரைநகர், ஏப், 23

காரைநகர் ஆலங்கன்று ஞானவைரவர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மணிக்கோபுர கும்பாபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊர் மக்களின் உதவியுடன் இரண்டு லட்சம் ரூபா செலவில் இந்த மணிக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. (க-73)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 23

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

தினசரி அபிஷேகம், வைரவர் பெருமான் வீதி உலா வருதல் என்பன இடம் பெறும். அடுத்த மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். (க-7)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு 100 மலசல கூடங்கள்

சுன்னாகம், ஏப். 23

பட்டினிக்கெதிரான நிறுவனம் இவ்வாண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் நூறு மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளது.

இதேவேளை—

நூறு கிணறுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் இவ்வாண்டில் செயற்படுத்தப்படவுள்ளது. இவற்றில் பொதுப் பாவனைக் கிணறுகளும், விவசாயக் கிணறுகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து ஐந்து பெரிய குளங்களைப் புனரமைக்கும் திட்டமும் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது. (க-27)

## தமிழ் இளைஞர் அறுவருக்கு விளக்க மறியல்

கொழும்பு, ஏப். 23

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் பிரியந்த பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ முஸ்லிம் இளைஞரான காதர் அகீர் (கொழும்பு).

★ சிவபாதம் சுதாகரன் (முல்லைத்தீவு).

★ கிருஷ்ணபிள்ளை ஜெகதீஸ்வரன் (நெல்லியடி).

★ பொன்னுத்துரை விஜயகுமார் (உரும்பிராய்).

★ அழகர்சாமி திலீப்குமார் (மன்னார்)

★ கனகசூரிய மாதவராஜா (திருகோணமலை). (க-6)

# துப்பாக்கி, குண்டுச் சத்தங்களினால்
# வலி. வடக்கு மக்கள் நாளாந்தம் பீதி

## இதனை நேரில் அனுபவித்தார் யாழ். எம். பி.

யாழ்ப்பாணம், ஏப். 23

வலிகாமம் வடக்குப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் இராணுவப் பயிற்சிகளினால் இங்குள்ள மக்கள் தினமும் பதற்றத்துடன் வாழ்கின்றனர்.

இப்பயிற்சியின் போது சரமாரியான துப்பாக்கிச்சூட்டுச்சத்தங்களும், குண்டு வெடிப்புச் சத்தங்களும் இங்குள்ள மக்களை அச்சமடையச் செய்கின்றன.

அண்மையில் வலிகாமம் வடக்குப் பகுதிக்கு விஜயம் செய்த அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவரும், யாழ். நாடாளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி இப்பயிற்சியினால் ஏற்படும் தாக்கத்தினை நேரில் அவதானித்தார்.

தனது வலி. வடக்கு விஜயத்தின் போது கீரிமலை நோக்கி அவர் சென்று கொண்டிருந்த போது கீரிமலை தச்சன்காட்டு வீதியில் துப்பாக்கிச்சூட்டுச்சத்தங்களும், குண்டுச்சத்தங்களும் கேட்டதாகவும் —

இதனைத் தொடர்ந்து சுமார் அரை மணித்தியாலம் வரை தமது பயணம் தடைப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சீராவில் காட்டுப்பகுதியில் இடம்பெற்ற படையினரின் பயிற்சியினாலே இந்தச் சத்தங்கள் கேட்பதாக அங்கு காவற் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் அவரிடம் தெரிவித்தனர்.

இந்தப் பயிற்சியினால் ஏற்படும் விளைவுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கப்போவதாகவும் அவர் கூறினார்.

இங்கு நடத்தப்படும் இராணுவப் பயிற்சிகளினால் பொதுமக்கள் சிலர் காயமடைந்தும், கால்நடைகள் இறந்தும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள மக்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் உட்பட பல வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும், தமிழர்விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களும் சந்தித்து இராணுவப் பயிற்சியினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்து உள்ளனர்.

இரவு நேரங்களிலும் இப்பயிற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

## ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தை மீள ஒப்படைக்குக!

யாழ்ப்பாணம், ஏப். 23

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (ச. தொ. ச.) பொறுப்பிலிருக்கும் யாழ். பிரதான வீதியிலுள்ள யாழ்.ப.நோ.கூ சங்கக் கட்டடத்தை மீள ஒப்படைக்குமாறு யாழ். ப. நோ. கூ. சங்கத்தினால் ச. தொ. சவின் கொழும்புத் தலைமையகத்திடம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் இயங்கிய ச. தொ. ச. விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளதால் கட்டடம் பாவிக்கப்படாமல் இருப்பதையும் ப. நோ. கூ. சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (க-5)

## மகாலிங்கம் ஞாபகார்த்த கட்டுரை மலர் வெளியீடு

இந்து சமயப் பேரவை முன்னாள் உப தலைவர் ஆறுமுகம் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கட்டுரை மலர் வெளியீட்டு விழா, எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், வெளியீட்டுரையை தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத் தலைவர் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்துவார்; நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். ஞாபகார்த்த உரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர், பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர் நிகழ்த்துவார்; (ம-15)

# பாராட்டுக்களும் நன்றியுடனான வாழ்த்துக்களும்

எமது நிறுவனத்தைப் பொறுப்பேற்ற மிகக் குறுகிய காலத்திலேயே -

நீண்ட காலமாக எமக்கு வழங்கப்படாதிருந்த அபாயப்படியினை வழங்கியமைக்காகவும்,

மிக விரைவில் எமக்கான நிரந்தரமான நியமனங்களைப் புதிய சம்பளத் திட்டத்துடன் வழங்குவதாக உறுதியளித்து அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருவதற்காகவும்

கௌரவ அமைச்சர்

**டக்ளஸ் தேவானந்தா**

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்

**மு. பாக்கியநாதன்**

திக்கம் வடிசாலை பொது முகாமையாளர்

**திரு. ப. இரவீந்திரன்**

ஆகியோரை நாம் உளமாரப் பாராட்டுவதோடு நன்றியுடனான நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியாளர்கள்,
திக்கம் வடிசாலை,
பனை அபிவிருத்திச் சபை.

(சி-16400)

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



| தாய் மடியில் | தயாபரன் அடியில் |
|---|---|
| 13 | 01 |
| — | — |
| 10 | 05 |
| — | — |
| 1946 | 1997 |

**அமரர் சபாரத்தினம் கனகசபாபதி**

(கொக்குவில் அஞ்சல் அலுவலகம்)

மண்ணில் நல்ல வண்ணம் வாழ
எண்ணில் சிறப்புகள் எய்திட எமதருகிருந்து
என்றும் உறுதுணையாய் வழியிட்ட தலைவா!
இன்றும் — இனியும் உம் நினைவு மறவோமே...!

மனைவி
க. சௌபாக்கியலட்சுமி

இணுவில்.

(சி-16399)

# மூன்றாவது வருட நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 25 |
| — | — |
| 07 | 04 |
| — | — |
| 1928 | 1998 |

திருமதி

**மகேசுவரி - சரவணமுத்து**

(ஓய்வு பெற்ற அதிபர்,
உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)

**திதி:- 23–04–2001 திங்கட்கிழமை**

புகழ் அழியாது

ஆண்டு மூன்று கழிந்ததம்மா!
அன்புடையோய் நின் வதனம்
ஈண்டெமது நெஞ்சமதில்
எழில் நிழலாய் ஆடுதம்மா!
மாண்ட நுங்கள் பூதவுடல்
மாநிலத்தில் நுமது புகழ்
ஆண்டு நூறு சென்றாலும்
அழியாது நிற்குமம்மா!

மக்கள், மருகர், பேரர்,
சகோதரர், உறவினர்.

"மகேசுவரம்"
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(86966)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 | 15 |
| — | — |
| 03 | 04 |
| — | — |
| 1947 | 1999 |

**அமரர் கந்தையா கணேசு**

மறவாத பிரிவினால்........!
மனதிலே நிறைந்து விட்டீர்!

பூலோக வாழ்வை வெறுத்து எமைப் பிரிந்து
தேவலோக வாழ்வை ஏற்ற அப்பாவே!
வருடங்கள் இரண்டு கடந்தாலும்
நம்மைவிட்டு மறவாத பிரிவே ஆகும்.


உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளை,
உற்றார், உறவினர்கள்.

நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை மேற்கு,
வண்ணார்பண்ணை.

(86965)

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**ஸ்ரீமான் கணபதிப்பிள்ளை தம்பிஐயா**

(பிரபல தொழில் அதிபர் M.K.T)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09–07–1913 | 29–04–1995 |

ஆண்டுகள் ஆறு சென்றதே — உங்கள்
அன்பு முகம் காணாது
நெஞ்சமலர் வாடுதே — உங்கள்
நேச மொழி கேளாது
காலங்கள் தான் போனாலும் — உங்கள்
பாசமது மறையாது
நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் — உங்கள்
நினைவலைகள் எம் நெஞ்சை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

M K.T உன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(86949)

## உதயன்

### 'விதி' எதுவோ...!

சோலி, சுரட்டு, தொந்தரவுகள் இல்லாமல் சற்று நிம்மதியாகச் சித்திரைப் புத்தாண்டு ஓய்வு நாள்களைக் கழிப்பதற்காக வெளிநாடு சென்ற நாட்டின் தலைவர் - ஜனாதிபதி - நாடு திரும்புகிறார்.

சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர் இரண்டு தரப்புகளும் போர்நிறுத்தம் செய்து உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் நிமிர்ந்திருந்து பேசுவதற்கு, தம்மீது இலங்கை அரசு விதித்த தடையை நீக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள முன் தேவைகள் குறித்து ஜனாதிபதி தமது மூத்த அமைச்சர்களுடனும் ஏனைய அரசியல் பிரமுகர்களுட னும் கலந்தாலோசனை செய்வார் என்பது செய்தி.

ஜனாதிபதி இந்த இரண்டு முன் தேவைகள் குறித்தும் கலந்தாலோசனை செய்வதற்கு முன்னர், அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் முடிவு எடுத்துப் பகிரங்கப்படுத்தியும் விட்டார்!

அரசாங்கத்தின் போர்நிறுத்தம் முடிவடைந்துவிட்டது. இனிமேல் நாம போர்நிறுத்தம் செய்யமாட்டோம். அரசாங்கம் அதற்குத் தயாரில்லை - என்பது பிரதமரின் அறிவிப்பு.

தாம் முன்வைத்துள்ள முன் தேவைகள் இரண்டும், பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்க அவசியமானவை என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

பேச்சுவார்த்தை சுமுகமாகவும் கௌரவமாகவும் நடைபெறுவதற்குப் புலிகள் கூறும் முன்தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது நடுவுநிலையாளர்களினதும் சமாதான விரும்பிகளினதும் கருத்து.

சமாதானப் பேச்சு நடைபெற்று, இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படுவதற்கு அரிய சந்தர்ப்பம் என்று மக்களில் மிகப் பெரும்பாலானோர்கள் - தமிழர்களும் சிங்களவர்களும் - கருதுகிறார்கள்.

மூன்றாவது நாடு ஒன்றின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதால், அதனைக் குழப்பிவிட்டு, ஒரு தரப்பு மீது அடுத்த தரப்பு குற்றஞ்சாட்டும் வாய்ப்பு இம்முறை குறைவு.

ஆகையால், பேச்சுவார்த்தையை ஆரம்பித்த பின்னரே அதன் முன்னேற்றத்தைப் பொறுத்து முன் தேவைகள் குறித்துப் பரிசீலனை செய்யலாம் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு, சமாதானத்தை எய்துவதில் உள்ளார்ந்த அக்கறை அதற்கு உண்டா என்ற பெருங் கேள்வியை முன்னிறுத்தியுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன் வந்த பின்னரே, விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்ய வேண்டும் என்று இலங்கை அரசு தீவிரமாக ஆதரவு திரட்டியது; தொங்கலில் நின்று பிரசாரம் செய்தது. அவ்வாறு தடை செய்யாவிடில் பிரிட்டனுடனான உறவுகள் பாதிக்கப்படும் என்ற அமைச்சர் கதிர்காமர் பயன்படுத்தியதையும் மறந்துவிட முடியாது.

வெளிநாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று ஆதரவு திரட்டிய, இப்போதும் திரட்டி வரும் அரசு, தான் விதித்த தடையை நீக்குவதற்கு எவ்வாறு மனம் ஒப்பும்?

மிகவும் சிக்கலான பிரச்சினையாக இந்த விடயம் உருவெடுக்கும். இரண்டு தரப்புகளும் தாங்கள் கௌரவப் பிரச்சினையாக உயர்த்தக் கூடிய விடயமாக இது மாறும்.

ஆகையால், ஜனாதிபதி நடத்தும் கலந்தாலோசனையின் முடிவு பேச்சுவார்த்தையின் விதியை நிர்ணயிக்கும் என்று கூறலாம்; 'விதி' எப்படியாகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போமே!

# விடுதலைப் புலிகள் மீதான தடையை தற்காலிகமாக என்றாலும் நீக்குங்கள்

## காணாமற்போன படையினர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.23

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் நாள் முதல் முடிவடையும் நாள் வரையிலாவது தற்காலிகமாக என்றாலும் புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டும். அப்போதுதான் சமாதானப் பேச்சுவார்த்தை முழுமையடையும் என கடமையின் போது காணாமற்போன படையினரின் பெற்றோர், உறவினர் சங்கத்தின் தலைவர் சி.பி.நாணயக்கார தெரிவித்தார்.

ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பை செய்துள்ள புலிகள் பேச்சுவார்த்தைக்கான முன் நிபந்தனையாக தம்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை இலங்கை அரசு நீக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கோரிக்கை ஒருவிதத்தில் நியாயமானதாகவே தென்படுகிறது.

புலிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளபோது எவ்வாறு அவர்களுடன் பேசமுடியும்? இதனைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக என்றாலும் தடையை நீக்க வேண்டும் என்று நாணயக்கார கூறியுள்ளார். (க)

## யுத்த நிறுத்தம் இனி ஒருபோதும் இல்லை

# பிரதமரின் போர் முழக்கத்துக்கு தமிழ்க் கட்சிகள் கண்டனம்

கொழும்பு,ஏப்.23

யுத்தநிறுத்தம் இனி ஒருபோதும் இல்லை. புலிகளுக்கு எதிரான யுத்தம் ஆரம்பமாகிவிட்டது என பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பாணந்துறையில் சூளுரைத்துள்ளமை அரசாங்கம் சமாதான முயற்சியில் அக்கறை காட்டவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சமாதான முயற்சிக்கு நல்லெண்ணமாக விடுதலைப் புலிகள் கடந்த நான்கு மாதகால யுத்தநிறுத்தத்தினை அமுல்படுத்தி சமாதானத்தின் மீதான அக்கறையினைக் காட்டி வருகின்றனர். தமது நம்பிக்கையையும் வெளிக்காட்டி வருகின்றனர். இந்த நிலையில் போா என்றால் போர் என பிரதமர் முழங்கி வருகின்றார். இது அரசின் நம்பகத்தன்மையற்ற தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது என்று மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

புலிகள் நல்லெண்ணத்தைக் காட்டி வரும் நிலையில் பிரதமரின் பேச்சு இவற்றுக்கெல்லாம் தலைகீழாக உள்ளது என்றும் அவர் சொன்னார்.

பிரதமரின் கூற்று தனிப்பட்ட கருத்தா அல்லது அரசின் கருத்தா என்ற சந்தேகம் எழுகின்றது. கடந்த இரண்டு மாதங்களாக மௌனமாக இருந்த பிரதமர் திடீர் என போர் நிறுத்தப் பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்திருப்பது அரசு சமாதான முயற்சியில் அக்கறையாக இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதான முயற்சி விடயத்தில் ஒவ்வொரு அமைச்சர்களும் ஒவ்வொரு கருத்தினைத் தெரிவித்து வருகின்றனர். பிரதமர் இனத்துவேசமாகக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார் என்று 'ரெலோ' அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (க)

# கொழும்பில் சனியன்று பெரும் தேடுதல் வேட்டை

கொழும்பு,ஏப்.23

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட விசேட பொலிஸ் பிரிவினர் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை நகரிலும அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும் தேடுதல் வேட்டை ஒன்றை நடத்தினர்.

கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இந்தத் தேடுதலின்போது தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பொலீஸாரால் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

காலி வீதியின் இருபக்கங்களிலும் குழுக்களாக நின்ற இராணுவத்தினரும், பொலீஸாரும் வீதிப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (க-7)

## கொட்டடிப் பகுதியில்

# பொதுச்சேவையில் ஈடுபட்ட 15 பேருக்குக் கௌரவம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் பொதுச்சேவைகளில் ஈடுபட்ட 15 பேர் "சமூகதிலகம்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினார்.

"சமூகதிலகம்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட 15பேரும் வருமாறு:-

பொன்.பழனிச்சாமி, இராமசாமி செல்வவடிவேல், பொன்னையா சிறிராஜபுலேந்திரன், சின்னவி அருமைத்துரை, இராஜேந்திரம் திருக்கருணை.

கனகசபை கமலேஸ்வரி, இளையதம்பி சற்குருநாதன், தம்பிராசா செந்தில்ராசா, சந்திரன் றீற்றா, நடராசா தகுணதாஸ்,

பெருமாள் செல்வராசா, ஜெகதீசன் சுஜித்திரன், தியாகராஜா பாஸ்கரன், இராமசாமி நாகேந்திரன், செல்லையா ஞானச்சந்திரன். (க-7)

### நாளை

சித்திரை 11
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
முன்னிரவு : 9.24 வரை
நட்சத்திரம்: பரணி
பின்னிரவு : 4.33 வரை
சுபநேரம் : 10.30 - 12.00
ராகுகாலம் : 3.00 - 4.30
(பழைய நேரப்படி)

# நெடுந்தீவுப் பாடசாலைக்கு காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு காணி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின் அன்பர்கள் இந்தக் காணியை அன்பளிப்பாக வழங்கினர் எனவும் -

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஈ.பி.டி.பி. யின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் க.மோகன் ஆகியோர் மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக இந்தக் காணி கிடைக்கப்பெற்றதாக பாடசாலை அதிபர் ஏ.சத்தியவரதன் தெரிவித்தார். (க-7)

### உதயவாக்கு

பிறரை விமர்சிக்கும் முன்னால் உன்னை நினை.

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் உரையாற்றுவதையும், வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார் மற்றும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் மு.திருஞானசம்பந்த பிள்ளை ஆகியோரையும் படத்தில் காணலாம். (க-69)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அண்மையில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாசாலை அதிபர், உப அதிபர், விரிவுரையாளர்களால் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (க-73)



யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் திருமதி தனரஞ்சனி துரைசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியின்போது தரம் 2 மாணவியான செல்வி குகனேஸ்வரன் மயூரதி திருமுறை இசைப்பதையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.பத்மநாதன், திருமதி பத்மநாதன் ஆகியோரையும் காணலாம். (க-7)



கொக்குவில் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலை மற்றும் கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க. பாடசாலை இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கமும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் மு.ஜெயகுமாரும் மங்கள விளக்கேற்றுகின்றனர். அருகில் இணைந்த பாடசாலைகளின் அதிபர்களான நா.ஜெயனொளி பவன், திருமதி மா.வேதநாதன், சிறப்பு விருந்தினரான லயன் இ.செல்வநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (க-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



அன்னை மடியில்
04 - 06 - 1939

ஆண்டவன் அடியில்
25 - 03 - 2001

திருமதி

### யோகராணி திருஞானசம்பந்தமூர்த்தி

எனது மனைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23-04-2001) திங்கட்கிழமை வில்லூன்றியில் நடைபெறும் நாளை (24-04-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நிகழவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சோ.தி.சம்பந்தர் (அளவெட்டி) - கணவர்.

*இல, 316, கோயில் வீதி, நல்லூர்.* (86803)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்...



மலர்வு
24 - 04 - 1948

உதிர்வு
26 - 04 - 2000

### அமரர் வேலன் சிவபாதம்

திதி:- 23.04.2001

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவு என்றென்றும் எம்மை விட்டு நீங்காது!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*விளாத்தியடி ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* (86650)

மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

## ஆனையிறவில் குண்டு வீச்சு

கொழும்பு,ஏப்.23

விமானப் படையின் ஐந்து அதிவேக தாக்குதல் ஜெட் விமானங்கள் வடபகுதியில் நேற்று முன்தினம் இனங்காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீது கடும் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி அறிவித்தது.

சோரன்பற்று, பளை, ஆனையிறவு ஆகிய இடங்களில் அமைந்துள்ள புலிகளின் நிலைகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ஐ-9)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,ஏப்.23

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் ஏப்ரல்மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேரவைத் தலைவர் இ.நாகலிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை இளைப்பாறிய நில அளவையாளர் வ.ஆ.தங்கமயில் நிகழ்த்துவார். இளைப்பாறிய அதிபர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் மதிப்பீட்டுரையாற்றுவார். (ஐ-173)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை-கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

*வேலணை வைத்திய கலாநிதி*
சி.இராசரத்தினம்,
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459 (86101)


## கொட்டாஞ்சேனையில் இயங்கிய 'போலிக் கச்சேரி' முற்றுகை

கொழும்பு,ஏப்.23

பல வருடங்களாக கொட்டாஞ்சேனை, சென்பெனடிக்ற் மாவத்தையில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் 'போலிக் கச்சேரி' முகத்துவாரம் பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போலி அத்தாட்சிப் பத்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

புறக்கோட்டைப் பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே முற்றுகை மேற்கொள்ளப்பட்டது. போலி தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், பொலீஸ் அனுமதிப் பத்திரங்கள், யாழ்ப்பாணம், வவுனியாவைச் சேர்ந்த சட்டத்தரணிகளின் வெற்றுக் கடிதத் தலைப்புகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. (க-20)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தகுதி, திறமை, சேவை மூப்பு என்பவற்றின் அடிப்படையில் அதிபர் சேவை தரம் 2-1 இற்கு பதவி உயர்வு பெற்ற

**திரு.சு.நடராசலிங்கம்** (பிரதி அதிபர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)

**திரு.கு.லிங்கநாயகம்** (அதிபர், நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

ஆகியோரை மேலும் பற்பல உயர்ச்சிகள்பெற்று தொடர்ந்து கல்விப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

கோ.பத்மநாதன் குடும்பத்தினர்,
*நெடுந்தீவு.*
(86870)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
24 - 09 - 1917

மறைவு
24 - 03 - 2001

### அமரர் வல்லிபுரம் வடிவேலு

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்திற்கு எமது இதய அஞ்சலிகள்!

இன்று (23.04.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.* (C/16377)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

24-03-2001 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்



அமரர்

### கதிரன் இலகுநாதன்

அவர்களின் அந்தியேட்டி இன்று (23-04-2001) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூன்றி மடத்திலும், வீட்டுக் கிருத்தியம் முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் வீட்டிலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (86914)

*மனைவி:* பொன்மலர், பிள்ளைகள்.

## ஆறாவது பிறந்தநாள் வாழ்த்து

23-04-2001

HAPPY BIRTHDAY



### செல்வி தவராஜா சுகன்யா

துன்னாலை மேற்கு, வாய்க்கால், கரவெட்டியைச் சேர்ந்தவர்களான
**திரு.திருமதி தவராஜா வளர்மதி**
தம்பதிகளின் அருந்தவப் புதல்வி

### சுகன்யா

தனது ஆறாவது பிறந்தநாளை இன்று (23-04-2001) திங்கட்கிழமை தனது "சுகன்யா இல்லத்தில்" வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். சுகன்யாவை அன்பு அப்பா, அம்மா, ஐயா, அப்பம்மா, மாமா குடும்பம், தாத்தா குடும்பம் (உடுவில்), டென்மார்க்கில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, சின்னண்ணா, மாமா, அத்தை, மச்சாள், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்றும் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*"சுகன்யா இல்லம்"*
வாய்க்கால்,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

*தகவல்:*
அண்ணா - ரமேஷ்
(டென்மார்க்)
(86760)

# சமாதானப் பேச்சு முயற்சிக்கு ஆதரவு தருமாறு நோர்வேத் தலைவர்கள் நிர்ப்பந்திக்கவில்லை

## நாடு திரும்பிய ரணில் தகவல்

கொழும்பு,ஏப்.23

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குமாறு நோர்வே அரச தலைவர்கள் தன்னைக் கேட்டுக்கொண்டார்களே தவிர எந்தவிதத்திலும் இது விடயத்தில் நிர்ப்பந்திக்கவில்லை என்று நோர்வே விஜயத்தை முடித்துக் கொண்டு சனிக்கிழமை நாடு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முயற்சிகளுக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவோம். ஆனால் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு முன்னர் ஐக்கியதேசியக் கட்சி அரசுக்கு முன்வைத்துள்ள நான்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பிலான கோரிக்கைகளுக்கு சாதகமான சமிக்ஞையை அரசு காண்பிக்கத் தவறினால் ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறும் நிலை ஏற்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

சனிக்கிழமை பிற்பகல் நாடு திரும்பிய ரணில் நோர்வே விஜயம் குறித்து மேலும் கூறியதாவது:-

நோர்வேத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஒளிவு மறைவின்றியே இடம்பெற்றன. சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடர்பாக நோர்வே இதுவரை மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பிரஸ்தாபிக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே எமது பேச்சுக்கள் இடம்பெற்றன.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் கூடிய விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் நோர்வே தீவிர கரிசனை காட்டுவதை தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

புலிகளுடன் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்குமாறு நோர்வேத் தலைவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் இது விடயத்தில் நோர்வே நிர்ப்பந்தம் எதனையும் செய்யவில்லை. சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குப் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின ஒத்துழைப்பின் அவசியத்தை நோர்வே பல சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தியது.

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரும் அரசின் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கும். ஆனால் பேச்சுவார்த்தைக்கான அடித்தளமிடப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கும் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு முன்வைத்துள்ள நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களையும் அமைக்கும் விடயத்தில் சாதகமான சமிக்ஞைகளைக் காண்பிக்கவேண்டியது அவசியமாகும். அப்படி அரசு செய்யத் தவறினால் அரசின் முன் முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதில் இருந்து நாம் ஒதுங்கிக் கொள்வதைவிட வேறு வழி கிடையாது.

எமது இந்த நிலைப்பாட்டை நோர்வேத் தலைவர்களிடம் நான் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளேன்.

நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இவ்விடயத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டியுள்ளதையும் நான் அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் சூழ்நிலையில் பேச்சுவார்த்தை, அரசமைப்புத் திருத்தம் என்பனவெல்லாம் அர்த்தமற்றவையாகவே அமைந்துவிடும் என்பதையும் தெளிவுபடுத்தினேன்.

இந்த விஜயத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சி இன நெருக்கடித் தீர்வு விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றது என்பது நோர்வே அரசுக்கு முழுமையாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது. இந்த நிலைப்பாட்டுக்கு ஏற்ற விதமானதும் இந்த நாட்டின் சகல சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுமானால் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில் நாம் பின் நிற்கப்போவதில்லை - என்றார் ரணில்.

(க)

## வவுனியாவில் குடும்பஸ்தரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.23

வவுனியா - சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின வவுனியா அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - பூந்தோட்ட நலன்புரி முகாம் 3 ஆம் யுனிற்றைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான வ.குணசேன என்பவரே காணமற்போனவராவார். (ம-6)

## பாடசாலைக்கு தற்காலிகக் கொட்டகை

கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கென கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்தில் தற்காலிகக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கொட்டகை அமைப்பதற்கென இரண்டு லட்சத்து 45 ஆயிரம் ரூபாவை வடக்கு மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை ஒதுக்கீடு செய்துள்ளது.

வகுப்புகளை நடத்துவதற்கு உள்ள இட நெருக்கடியைப் போக்குவதற்கு வசதியாகவே இந்தத் தற்காலிகக் கொட்டகை அமைக்கப்படுகிறது.(ஐ-173)

## மீண்டும் தப்பியோடிய சிப்பாய்

கடற்படையில் இருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவரை கைது செய்து அழைத்துவந்த சமயம் அவிசாவளைப் பகுதியிலிருந்து அவர் மீண்டும் தப்பி ஓடியுள்ளார்.

தகவல் ஒன்றின் பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்து அழைத்து வந்தவேளை இவர் தப்பி ஓடியதாகவும் -

இவரை மீண்டும் கைது செய்யும் முயற்சியில் அவிசாவளைப் பொலீஸார் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-6)

## பாடசாலை இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

வலி.தெற்கு,ஏப்.23

நாட்டிலுள்ள அரசாங்க பாடசாலைகள் யாவும் முதலாம் தவணையை முடித்துக்கொண்டு இன்று திங்கட்கிழமை இரண்டாம் தவணை கற்றல் - கற்பித்தலுக்காகத் திறக்கப்பட உள்ளன. (க-7-152)

# யாழ்.மாணவரின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்த ஆய்வுகூட, நூலக வசதிகள் இல்லை

## சமாதானப் பேரவையினரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஆய்வுகூடம் மற்றும் நூலக வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை என்று யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்களிடம் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.கிளையினால் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.கிளையின் உபதலைவரும் யாழ்.இந்துமகளிர் கல்லூரி அதிபருமான திருமதி சரஸ்வதி ஜெயராஜா தலைமையிலான ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் சமாதானப் பேரவை உறுப்பினர்களைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

பல பாடசாலைகளில் கணனித் துறை இதுவரையும் அறிமுகம் செய்யப்படவில்லை. பாடசாலைகளுக்குத் தேவையான பாடநூல்கள் ஒழுங்கான முறையில் அனுப்பி வைக்கப்படுவதில்லை. அவ்வாறு அனுப்பப்பட்டாலும் உரிய நேரத்துக்கு பாடநூல்கள் வந்து சேரவில்லை.

மாறி மாறி இடம்பெற்ற இடம்பெயர்வுகளினால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து வன்னி போன்ற வெளிமாவட்டங்களுக்குச் சென்ற மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் போக்குவரத்துகளின் போது பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். பஸ் உட்பட எந்த வாகனங்களில் பயணம் செய்தாலும் அடிக்கடி இறங்கி ஏறவேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தீவுப்பகுதிக்குச் செல்லும் ஆசிரியர்கள் இவ்வாறு இறக்கி ஏற்றப்படுவதால் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு செல்லமுடியாத நிலையிலுள்ளனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### சட்டத்தரணிகளுடன் சந்திப்பு

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் மற்றும் மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா ஆகியோரையும் சமாதானப் பேரவையினர் யாழ்.நீதிமன்ற வளாகத்தில் வைத்துச் சந்தித்தனர்.

யாழ்.சட்டத்தரணிகள் இச்சந்திப்பின் போது தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்திலுள்ள பொலீஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் கடமையாற்றக் கூடிய பொலீஸாரைக கூடுதலாகக் கடமைக்கு அமர்த்த வேண்டும்.

தமிழ் தெரிந்த பொலீஸார் இல்லாத காரணத்தினால் வாக்குமூலங்கள் சிங்கள மொழியில் பதிவுசெய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரங்களும் சிங்களத்திலே நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்கள். (க-5)

# தென்மராட்சி மக்களின் ஒரு வருட துன்ப, துயரங்கள் எப்போது தீரும்?

## விரைவில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குக!

1990ஆம் ஆண்டு வடபகுதியில் இருந்து சென்ற முஸ்லிம் மக்களின் அனேகர் புத்தள மாவட்டத்திலே குடியேறினர். அவர்களை அங்குள்ள முஸ்லிம்கள் அன்போடு வரவேற்று ஆதரவளித்தார்களாம். ஆனால் இன்று பத்து ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் வரவேற்று ஆதரவளித்தவர்களே அவர்களை அவமதித்து வரட்டி வருகிறார்களாம்.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் அடுத்த (மே) மாதம் 19 ஆம் திகதி ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்கின்றனர். பச்சிலைப்பள்ளி மக்கள் இடம்பெயர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகி மேலும் ஒரு மாதமும் கடந்து விட்டது. தென்மராட்சி தெற்கு - தனங்களப்பு, மறவன்புலோ, நாவற்குழி மக்கள் இடம்பெயர்ந்து ஒரு வருடமும் நான்கு மாதங்களும் கடந்துவிட்டன.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் அரைப் பங்கினர் வடமராட்சியிலும், ஏனையோர் வலிகாமத்திலும் எப்போது எங்கள் சொந்த இடம் செல்வோம் என்ற எதிர்பார்ப்பில் கவலையுடன் வசித்து வருகின்றனர். தென்மராட்சிப் பகுதி மக்களில் சிறு தொகையினர் பாதுகாப்புப் படையில் அனுமதி பெற்று சாவகச்சேரி சென்று, தம் உடைந்த, அழிந்து போயுள்ள இல்லங்களையும் சொத்துக்களைக் காணாதும் கவலையுடன் திரும்பி வந்துள்ளனர்.

செல்வம் கொழித்து சோலை போல் விளங்கிய தென்மராட்சி சுடுகாடு போல, உலக மகா யுத்தத்தில் அழிந்து போன அன்றைய 'ஜேர்மன்' நாடு போல காட்சியளிப்பதைக் கண்டு உள்ளம் உடைந்து, மீண்டும் எம் வாழ்வு மலருமா? ஊர் திருந்துமா? என்ற சந்தேகத்தில் தென்மராட்சி மக்கள் வாடுகின்றனர்.

1987 இல் வடமராட்சியில் 'ஒபரேஷன் லிபரேஷன்' தாக்குதல் நடந்தபோதும், 1995 இல் வலிகாமம்




மக்கள் இடம்பெயர்வின் போதும், அன்போடு அம்மக்களை வரவேற்று ஆதரித்த தென்மராட்சி மக்கள், இடம்பெயர்ந்து அவர்கள் இல்லம் நாடி அகதிகளாய்ச் சென்றனர். மூன்று மாதங்களில் வடமராட்சி மக்களும், ஆறு மாதத்தில் வலிகாம மக்களும் மகிழ்ச்சியுடனேயே தம் இல்லங்களுக்கு மீண்டனர்.

ஆனால் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி மக்களோ ஆண்டொன்றைக் கடந்த கசப்புணர்விலும், சொத்திழந்த மன உளைச்சலிலும், ஒரு வருடத்திலேயே பல இடங்களில் வாழ நேர்ந்த வெறுப்பிலும் உள்ளனர்.

இடம்பெயர்ந்து வந்த இம்மக்கள் சிலருக்கு தொண்டு நிறுவனங்களின் உதவிகள் கிட்டவில்லை. சில கிராம சேவையாளர்கள் இன்று மக்களை அவமதித்தும், இழுத்தடித்தும் அலைய வைப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அண்மையில் தென்மராட்சி மக்களை அவமதித்துப் பேசிய கிராம அலுவலரைக் கண்டித்த சமூக சேவையாளர் ஒருவர் கிராம அலுவலரால் தாக்கப்பட்டார். வேறு ஓர் கிராம அலுவலர் மக்களால் தாக்கப்பட்டார். இவை குறித்து நெல்லியடிப் பொலீஸிலும் யாழ்.அரசாங்க அதிபரிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சில இடங்களில் இடம்பெயர் மக்களும் ஊர்மக்களும் மோதிக்கொள்ளும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலை மேலும் மோசமடையாமல் இருக்க இடம்பெயர் மக்கள் மீண்டும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்ப ஆவன செய்யப்பட வேண்டும். அரசியல் தலைவர்கள் இந்த விடயத்தில் சிரத்தைகொண்டு இம்மக்கள் தம் சொந்த இடங்களுக்கு - கைதடி மக்கள் மீண்டும் மீளக்குடியேறியது போலக் குடியமர உடன் ஆவன செய்ய வேண்டும்.

*மாணிக்க லீலாவிநோதன்*

வீடு உடைந்தவர்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைத்தும், குடிநீர் பெற ஆவன செய்யப்பட வேண்டும். அங்குள்ள மிதிவெடிகள் அகற்றப்படவேண்டும். பாதுகாப்புடன் மக்கள் குடியமர அரச அதிபரும், அரசியல்த் தலைவர்களும் ஆவன செய்வார்களா?

ஒரு வருடத்திலேயே வெறுப்புணர்வு ஏற்பட்டு வரும் குடாநாட்டு மக்களின் பிரச்சினை நீங்கி - வாழ்வு மலர உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம். ★

# சரசாலைப் பகுதியில் திருடப்பட்ட தெய்வ விக்கிரகங்கள் பல அச்சுவேலிப் பொலீஸாரால் மீட்பு

## 3 சிறுவர்கள் கைதாகிப் பிணையில்

வலி.வடக்கு,ஏப்.23

தென்மராட்சி சரசாலையிலிருந்து திருட்டுத்தனமாக எடுத்துவரப்பட்ட இந்துமத தெய்வ விக்கிரகங்கள் அச்சுவேலிப் பொலீஸாரினால் மீட்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த விக்கிரகங்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் மூன்று சிறுவர்களும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட விநாயகர், முருகன், வள்ளி, நடராஜர், சிவகாமி அம்பாள், மனோன்மணி அம்பாள் விக்கிரகங்களும் அங்குசம், சக்திவேல் போன்றவையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த விக்கிரகங்களை இணுவில் சிவன் கோயிலில் வைக்கும்படியும் சிறுவர்களை தலா 5 ஆயிரம் ரூபா பிணைமுறி நிறைவேற்றிச் செல்வதற்கும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

இதேவேளை -

இந்த விக்கிரகங்கள் தமது பரம்பரை ஆலய விக்கிரகங்கள் எனக் கூறி அவற்றைத் தம்மிடம் கையளிக்குமாறு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி மல்லாகம் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். (க-5-86)

# மோசடியில் ஈடுபட்டு வெளிநாடுகளுக்கு தப்பியோடிய இருநூறு பேரைக் கைது செய்ய சர்வதேசப் பொலீஸின் உதவி நாடப்படுகிறது!

பல்வேறு மோசடிச் செயல்களில் ஈடுபட்ட 200 பேர் நாட்டை விட்டே தப்பி ஓடிவிட்டனர். இவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்கு சர்வதேசப் பொலீஸாரின் உதவியை குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவு நாடியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வி.கந்தசாமி கூறியதாவது:-

பல கோடி ரூபா பெறுமதியான நிதி மற்றும் சொத்து மோசடிகளில் ஈடுபட்ட 200 நபர்கள் நாட்டை விட்டு தப்பி ஓடியிருப்பதாகக் கண்டறிந்துள்ளோம்.

இவர்களைக் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வந்து விசாரணை செய்வதற்கு உதவுமாறு சர்வதேச பொலீஸின் உதவியை கேட்டுள்ளோம்.

இந்த மோசடிக்காரர்களின் விவரங்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலையும் சர்வதேசப் பொலீஸ் பிரிவுக்கு அனுப்பியுள்ளோம் என்றார்.

இதேவேளை -

தப்பி ஓடியவர்கள் எந்த நாட்டில் தஞ்சமடைந்திருக்கிறார்கள் என்பதைக் கூட குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறப்படுகிறது. (க-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாய்க்குட்டி விற்பனைக்கு

கறுப்பு, வெள்ளை, பிறவுண் கலர் பொமேரியன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஞானசேகரம், சாவற்கட்டு, ஆனைக்கோட்டை. (86954)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **YAMAHA CDI 50** கிளைச்மொடல் மோட்டார் சைக்கிள் இதுவரை தனிப் பெற்றோல், ஒருகைப் பாவனையில் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு: கா.இ.கார்த்திகேசு 'அபிராமி' நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை. (86891)

றொபின் ஜெனரேற்றர் (ஒரிஜினல் ஜப்பான்) 1300 **out put** விற்பனைக்குண்டு. தொடர்பு: **J.J.**இராஜசிங்கம், 74, சட்டநாதர் கோயில் வீதி (சிறுவர் இல்லத்துக்கருகில்) கல்வியங்காடு. (86961)

மீன்களுடன் இரண்டு தொட்டிகள், **I.H.P.** யுனிற் A/C குளிரூட்டியும், சிங்கர் நிச்சி மெசினும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிக்கோ பத்மநாதன், 370, ஆஸ்பத்திரி வீதி (நவீன சந்தை முன்பாக), யாழ்ப்பாணம். (86969)

## பழைய மாணவர் ஒன்று கூடல்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வின்போது 1998/1999 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-173)

## தவறிவிட்டது

கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைச் சேர்ந்த கந்தவனம் நடராசா என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0907020376), தேசிய அ.அட்டை புதுப்பித்தலுக்கான கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட பத்திரம் என்பன கடந்த 17.04.2001 அன்று திருநெல்வேலிச் சந்தையிலுள்ள துவிச்சக்கரவண்டி நிறுத்துமிடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலிச் சந்தையிலுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். (86962)

கந்தசாமி அருளானந்தம் என்பவரது இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி என்னும் முகவரியுடைய தே.அ.அட்டை (இல.732063404V), விசேட அ.அட்டை (இல.0909018489), பிரிக்கேற் பாஸ் என்பன 10.04.2001 அன்று நெல்லியடிக்கும் உடுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடுப்பிட்டி குருநாதர் ஸ்ரோரில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86959)

## English Classes (O/L)

By Experienced London Graduate Teacher Contact: Dr.V.Sriskanthan (Rangitha Medicals) Manipay. (86946)

## இலக்கியக் கட்டுரைகள்

க.பொ.த.சாதாரணதர, உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியமும், நாடகமும் கற்க உதவக்கூடிய 38 கட்டுரைகள்: எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். (86956)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் வ-து

## பதவி வெற்றிடம்

**இரண்டுசக்கர உழவு இயந்திர சாரதி:-**

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 'பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு எதிர்வரும் 05.05.2001 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

**தகைமைகள்:-** 8ஆம் வகுப்பில் சித்தியடைந்து 2 வருட அனுபவத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:-** 25-50

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- பொதுமுகாமையாளர்
*ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.*

(86951)

## Training of Trainers [TOT] course in community Mental Health

"Shanthiham" with assistance from UNICEF, proposes to commence, in early June, a Training of Trainers (TOT) course in Community Mental Health. The course will be of 9 months duration. Appropriate remuneration will be paid during the training period.

***Admission requirements***

☆ Applicants should preferably be graduates in sociology, phychology, biology or related fields. Others with lesser qualifications may also apply.
☆ An aptitude for community mental health (previous experience in social work, field work, work in refugee camps, mental health, counselling, primary health care etc.)
☆ Ability to teach and train others.
☆ Preferably be under 40 years of age.
☆ Although the course will be conducted in Tamil, a good knowledge of English is essential.
☆ Ability & willingness to travel in the community, village and periphery. Ability to ride a bicycle and or motor cycle (with driving license)
☆ Computer literacy will be helpful.
☆ Females are encouraged to apply.

**Applications giving a full curriculum vitae and experience should be sent to:**

**Project Director**
***Community Mental Health Programme(TPO)***
**"Shanthiham"**
***15, Kachcheri - Nallur road***
***Chundikuli, Jaffna.***

*Applications close on May 04, 2001* (86963)

## வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விபரம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 20ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | | |
|---|---|---|
| (156036ஏ) | (170051ஏ) | (172876ஏ) |
| (172877ஏ) | (181531ஏ) | (181643ஏ) |
| (183196ஏ) | (183196பி) | (183196சி) |
| (183196டி) | (184979ஏ) | (185073ஏ) |
| (185073பி) | (185073சி) | (185095ஏ) |
| (186583ஏ) | (186583பி) | (186750ஏ) |
| (186750பி) | (186750சி) | (186753ஏ) |
| (186787ஏ) | (186794ஏ) | (186794பி) |
| (186800ஏ) | (186850ஏ) | (186850பி) |
| (186956ஏ) | (186956பி) | (186956சி) |
| (186956டி) | (186956ஈ) | (186957ஏ) |
| (186997ஏ) | (186997பி) | (186997சி) |
| (186998ஏ) | (186998பி) | (187052ஏ) |
| (187061ஏ) | (187061பி) | (187061சி) |
| (187227ஏ) | (188616ஏ) | (188616பி) |
| (188642ஏ) | (188666ஏ) | (188666பி) |
| (188681ஏ) | (188695ஏ) | (188729ஏ) |
| (189354ஏ) | | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (183486ஏ) | (185142ஏ) | (186742ஏ) |
| (186742பி) | (186742சி) | (186776ஏ) |
| (186825ஏ) | (186862ஏ) | (186884ஏ) |
| (186970ஏ) | (186970பி) | (186970சி) |
| (186970டி) | (186974ஏ) | (186974பி) |
| (187096ஏ) | (187105ஏ) | (187144ஏ) |
| (188633ஏ) | (188633பி) | (188717ஏ) |
| (188717பி) | (188717சி) | (188745ஏ) |
| (188745பி) | (188745சி) | (188772ஏ) |
| (188772பி) | (188795ஏ) | (189347ஏ) |
| (189350ஏ) | (189410ஏ) | (189410பி) |

### சண்டிலிப்பாய்

| | | |
|---|---|---|
| (179169ஏ) | (179170ஏ) | (179170பி) |
| (181103பி) | (181492ஏ) | (181492பி) |
| (181492சி) | (183103ஏ) | (183103சி) |
| (183188ஏ) | (183188பி) | (184841பி) |
| (184960ஏ) | (185147ஏ) | (185148ஏ) |
| (185202ஏ) | (186610ஏ) | (186752ஏ) |
| (186752பி) | (186752சி) | (186754ஏ) |
| (186754பி) | (186754சி) | (186754டி) |
| (186797ஏ) | (186807ஏ) | (186808ஏ) |
| (186812ஏ) | (186813ஏ) | (186841ஏ) |
| (186934ஏ) | (186963ஏ) | (186963பி) |
| (186963சி) | (186995ஏ) | (187009ஏ) |
| (187009பி) | (187009சி) | (187057ஏ) |
| (187181ஏ) | (187181பி) | (187205ஏ) |
| (187205பி) | (187214ஏ) | (187214பி) |
| (187214சி) | (188611ஏ) | (188623ஏ) |
| (188641ஏ) | (188641பி) | (188641சி) |
| (188643ஏ) | (188644ஏ) | (188671ஏ) |
| (188671பி) | (188678ஏ) | (188678பி) |
| (188678சி) | (188690ஏ) | (188710ஏ) |
| (188756ஏ) | (188756பி) | (188788ஏ) |
| (189317ஏ) | (189317பி) | (189465ஏ) |
| (189465பி) | (189465சி) | (189465டி) |

### தெல்லிப்பழை

| | | |
|---|---|---|
| (181665ஏ) | (185278ஏ) | (186763ஏ) |
| (186763பி) | (186882ஏ) | (186940ஏ) |
| (186940பி) | (186940சி) | (186940டி) |
| (186943ஏ) | (186943பி) | (186948ஏ) |
| (187120ஏ) | (187120பி) | (187120சி) |
| (187177ஏ) | (188657ஏ) | (188657பி) |
| (188705ஏ) | (188706ஏ) | (189346ஏ) |

### உடுவில்

| | | |
|---|---|---|
| (179194ஏ) | (180316ஏ) | (180316பி) |
| (180330ஏ) | (185087ஏ) | (185239ஏ) |
| (185239பி) | (186810ஏ) | (186810பி) |
| (186810சி) | (186810டி) | (186810ஈ) |
| (186810எவ்) | (186823ஏ) | (186867ஏ) |
| (186926ஏ) | (187063ஏ) | (187063பி) |
| (187063சி) | (187094ஏ) | (187094பி) |
| (187094சி) | (187130ஏ) | (187196ஏ) |
| (188607ஏ) | (188607பி) | (188607சி) |
| (188668ஏ) | (188668பி) | (188689ஏ) |
| (188689பி) | (188689சி) | (188694ஏ) |
| (188731ஏ) | (188746ஏ) | (188746பி) |
| (188765ஏ) | (189378ஏ) | (189378பி) |
| (189378சி) | (189405ஏ) | (189438ஏ) |


(க-10)

## MASTER NUMEROLOGY

எண் கலை உலகில்
வரலாற்று சாதனை!
அதிர்ஷ்ட இரகசியங்கள்
வெளிவந்து விட்டன!!
இன்றே ஆங்கில பிறந்த திகதி,
பெயர், கையொப்பம் இட்டு
சுய விலாசமிட்ட முத்திரை
ஒட்டிய கடித உறையுடன்
விண்ணப்பிக்கவும்.

MASTER NUMEROLOGIST,
**C.C.K. SRI RAJA RAJEASHWARAN**
SRI MASTER.
VITHANAI LANE,
VALVETTITURAI. (86912)

## முதலாம் வருட இதய அஞ்சலி



தோற்றம் 17 - 02 - 1920

மறைவு 23 - 04 - 2000

அமரர்
### மோசஸ் மைக்கல் அருளானந்தம்
(தம்பிராசா)

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (இயேசு)**

"இறை அருளோடு ஆனந்தம் பொங்கிட
நிறைவோடு நின் அணைப்பில் வாழ்ந்தோம்
அன்போடு அறிவூட்டி அகிலத்தில் நாமுயர
உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்தாய்!
ஆண்டொன்று போனாலும் ஆறாது எம்துயரம்
நித்தமும் நின் உருவம் காண்கின்றோம் எம் வீட்டில்.
பல்லாண்டு போனாலும் இப்பூவுலகம் அழிந்தாலும்
எம் இனிய அப்பாவை ஒரு போதும் நாம் மறவோம்"

**நிமலன் இயேசுவின் பாதத்தில் நின் ஆன்மா நித்தியமாய் இளைப்பாற நிதமும் நாம் வேண்டுகின்றோம்.**

இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (23-04-2001) திங்கட்கிழமை முற்பகல் 11.30 (புதிய நேரம்) மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

*6/3,மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (86968)

**மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர்
### திரு.மணியம் கணபதிப்பிள்ளை
அவர்கள்

**இலங்கை அதிபர் சேவையில் அதிபர் தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

(86964) **- தும்பளை மக்கள்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 - 01 - 1953

உதிர்வு 22 - 04 - 1999

### அமரர் கந்தையா பரமநாதன்

**திதி:- 23-04-2001**

ஈராண்டு சென்றாலும் உன் பிரிவுத் துயரம் ஆறவில்லை
எம் மனதில் குடி கொண்ட சின்னண்ணாவே!
உன் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

*தகவல்:* **இ.கருணாகரன்(C.E.B.)**
***No.14,*** *திருமகள் வீதி,*
*அரியாலை.*
*யாழ்ப்பாணம்.* (86967)

*பிரிவால் துயருறும்:*
**தாய், சகோதரர்கள்,**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

# தைவானுக்கு அமெரிக்கா ஆதரவு;
# சீனா எதிர்கொள்ளும் நெருக்கடி!

பெய்ஜிங், ஏப். 23

சீனா ராஜிய விவகாரங்களில் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சீன அரசுடனான உறவில் தனித்தனியாக முறுகல் நிலைகளைக் கொண்டுள்ள அமெரிக்காவும், ஜப்பானும், தைவானின் முன்னாள் அதிபர் லீடொன்கியுயிக்கு தமது நாடுகளுக்கு வருவதற்கு 'விசா'க்களைவழங்கியுள்ளது.

தைவானை, சீனாவின் ஒரு பகுதியென்று கூறித் தமது ஆட்சியில் அதனை இணைக்க முயற்சித்து வரும் சீன அரசை மிகக் கடுமையாக விமர்சித்து வருபவர் டொன்கியுயி அவருக்கு விசா வழங்க முன் வந்ததையடுத்து, இருதரப்பு தொடர்புகளுக்கு ஆபத்து உண்டாகும் என்று அமெரிக்காவையும், ஜப்பானையும், சீனா எச்சரித்துள்ளது.

அமெரிக்க உளவு விமான விவகாரம் முதல் மனித உரிமைகள் மற்றும் வர்த்தகப் பிரச்சினைகள் வரை அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே நெருடல்கள் அதிகரித்துள்ள சமயத்தில் தாய்வானின் முன்னாள் அதிபருக்கு சுற்றுலா விசா வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அத்துடன் சீனத் தாக்குதல்களில் இருந்து தற்காத்துக் கொள்ள தைவானுக்கு விற்க உள்ள ஆயுதங்களின் பட்டியலை அமெரிக்கா விரைவில் அறிவிக்க உள்ளது.

இவை சீனாவுக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தும் விடயங்கள் என்று கூறப்படுகின்றது. (ஒ-7-4)

# பூகம்ப அகதிகளுக்கான நிதி ஆஸ்திரேலியாவில் கொள்ளை

மெல்போன், ஏப். 23

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்காக ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தினால் சேகரிக்கப்பட்ட நிதி திருட்டுப் போய்விட்டது.

இந்தியா மற்றும் எல்சல்வடோரில் ஏற்பட்ட பூகம்பங்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக சேகரித்து வைக்கப்பட்டிருந்த 35 ஆயிரம்அமெரிக்கடொலர்கள் பெறுமதியான பணமும், காசோலைகளுமே கடந்த வாரம் திருட்டுப் போயுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து விக்டோரியா மாநில பொலீஸார் கூறுகையில், பணம் மற்றும் காசோலைகள் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகங்கள் இரண்டையும் திருடிய திருடர்கள் செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் சொந்தமான வாகனிலேயே தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்தனர்.

திருட்டுப் போனவற்றை மீட்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர் (ஒ)

# ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில்
# சீனாவைக் கண்டிக்க அமெரிக்கா மேற்கொண்ட முயற்சி தோல்வி

பெய்ஜிங், ஏப். 23

சீனாவைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்கா கொண்டு வரவிருந்த தீர்மானம் தடுத்து நிறுத்தப்பட்டது. தீர்மானத்தைத் தடுக்க தனக்குதவிய நாடுகளுக்கு சீனா நன்றி தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வருடாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை ஜெனீவாவில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் சீனாவைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற அமெரிக்கா முயற்சி மேற்கொண்டது.

எனினும் சீனா விசேடத் தீர்மானமொன்றைப் பயன்படுத்தி தனக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வரப்படுவதைத் தடுத்து விட்டது.

சீனாவின் விசேட தீர்மானத்துக்கு ஆதரவாக பாகிஸ்தான் உட்பட 23 நாடுகள் வாக்களித்திருந்தன. தனக்கு ஆதரவளித்த அந்த நாடுகளுக்கு சீனா நன்றி தெரிவித்துள்ளது. (ஒ-6-9)

# வெள்ளைக் கொடி ஏந்தி வர்த்தகர்கள் ஊர்வலம்

டாக்கா, ஏப். 23

பங்களாதேஷில் அரசியல் ஆயுதமாக கதவடைப்பு மற்றும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் பயன்படுத்தப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் வர்த்தகர்கள் வெள்ளைக் கொடி ஏந்தி ஊர்வலம் சென்றனர்.

கடந்த சில மாதங்களாகவே பிரதமர் ஷேக் ஹசீனாவைப் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் பல நாள்கள் தொடர்ந்து நீடிக்கும் வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தி வருவதற்கு வர்த்தகர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (ஒ-6-9)

# திரிணாமுல் காங்கிரஸில் பிளவு

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸிலிருந்துமுன்னணித் தலைவரும், முன்னாள் மத்திய இணை அமைச்சருமான அஜித்குமார் பாஞ்சா, தான் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இதனால் திரிணாமுல் காங்கிரஸில்பிளவுஏற்பட்டுள்ளது.

# படை வீரர்களின் மரணம் குறித்து ஆராய உயர்மட்டக் கூட்டம்

## பிரதமர் வாஜ்பாய் கூட்டினார்

டாக்கா, ஏப். 23

பங்களாதேஷ் எல்லைப் படை வீரர்களால் இந்திய இராணுவத்தினர் 15 பேர் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விவாதிக்க உயர்நிலைக்கூட்டமொன்றை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நேற்றுக் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி, இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் குல்பஷன் ஜகத் உட்படப் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்திய வீரர்கள் மிகக் கொடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்ட பிறகு மிக அருகில் இருந்து கண்களுக்குள் சுடப்பட்டது பிரேத பரிசோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக ஜகத் கூறினார்.

சடலங்களில் கத்தியால் குத்திக் கிழித்த அடையாளங்களும் இருந்ததாக அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் மேகாலயா மாநில எல்லையில் திடீர்த் தாக்குதலை மேற்கொண்ட பங்களாதேஷ் வீரர்கள் ஒரு கிராமத்தைக் கைப்பற்றி இந்திய வீரர்களைக் கொன்றதுடன், தீ வைப்புப் போன்ற செயல்களிலும் ஈடுபட்டது தெரிந்ததே. (ஒ)

# வேட்பாளர்களுக்கு ஜெயலலிதா ஒரே நாளில் வழங்கிய ரூ.10 கோடி!

## தமிழகப் பத்திரிகை வெளியிட்ட தகவல்

சென்னை, ஏப். 23

அ. தி.மு. க வேட்பாளர்களுக்கு தேர்தல் செலவுக்காக ஒரேநாளில் சுமார் 10 கோடி ரூபாவை அ. தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா விநியோகித்ததாக தமிழகப் பத்திரிகையான 'தினகரன்' செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது:-

கிருஷ்ணகிரி தொகுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்த ஜெயலலிதா தனது தோழி சசிகலாவுடன் மதுரை வந்து சேர்ந்தார் அங்கு அழகர் கோயில் சாலையில் உள்ள நட்சத்திர தங்கும் விடுதியான அசோக் ஹோட்டலில் இருவரும் தங்கினார்கள்.

முன் கூட்டியே திட்டமிட்டபடி தமிழகம், பாண்டிச்சேரி அ. தி. மு. க வேட்பாளர்கள் அசோக்ஹோட்டலில் ஜெயலலிதாவை சந்தித்தனர்.

அப்போது ஒவ்வொரு வேட்பாளருக்கும் ரூபா 5 லட்சம் முதல் 7 லட்சம வரை பொலீத்தீன் பைகளில் இட்டு பணம் கொடுக்கப்பட்டது. 'இது முதற்கட்டம் தான், அடுத்தடுத்து வழங்கப்படும் பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்' என்று ஜெயலலிதா வேட்பாளர்களிடம் கூறினார்.

பணம் வழங்கும் நிகழ்ச்சியில் ஒரே நாளில் 10 கோடி ரூபாவரை விநியோகிக்கப்பட்டுள்ளது.

பைகளில் வாங்கிய பணத்தை சிறிய மூட்டைகள் போல் கையில் தூக்கிப் பிடித்தபடி வேட்பாளர்கள் வெளியே வந்தபோது செய்தியாளர்கள் அவர்களைப் புகைப்படமெடுக்க முயற்சித்தனர்.

அதனால் வேட்பாளர்கள் இதனையும் 'தெஹல்கார்' ஆயுத பேர விவகாரம் போல் ஆக்கி விடாதீர்கள் என்று கூறியபடி கார்களில் ஏறி மறைந்தனர். (ஒ)

# முதல் செயற்கை இதயம் அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

வாஷிங்ரன், ஏப். 23

செயற்கை இதயத்தைத் தயாரிப்பதில் தாம் வெற்றியடைந்துள்ளதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

சாகுசெட்ஸ் மாநிலத்தில் உள்ள அந்த நிறுவனம் உலகின் முதல் தடவையாகச் செயற்கை இதயத்தை உருவாக்கியுள்ளது.

மேற்கொள்ளப்படும் அனைத்துச் சிகிச்சைகளும் பயனளிக்கத் தவறும்போது இதயத்துக்குச் சுமார் இரண்டு மாதகாலம் உயிரூட்டப் புதிய கண்டுபிடிப்பு பயன்படும்.

செயற்கை இதயத்தின் வாழ்நாளை 5 ஆண்டு காலம் நீடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட நிறுவனம் கூறியுள்ளது.

செயற்கை இதயத்தை உருவாக்க 70 லட்சம் ரூபாவும் 8 ஆண்டுகளும் செலவாகியுள்ளன.

இதய நோயாளிகள் 5 பேருக்கு பரிசோதனை முயற்சியாகச் செயற்கை இதயங்கள் பொருத்தப்பட உள்ளன. (ஒ-4)

# கட்சிகளின் நச்சரிப்பால் வெளிநாடு நழுவுகிறார் ரஜனி

## ரசிகர்கள் மத்தியில் திகைப்பு

சென்னை, ஏப். 23

தமிழக சட்டசபைத் தேர்தலில் எந்த அணிக்கும் ஆதரவு தெரிவிக்காமல், நடிகர் ரஜனிகாந்த் வெளிநாடு செல்ல இருப்பதாகவும், வாக்களிக்கக் கூட அவர் வரப்போவதில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் ரஜனி ரசிகர்கள் தேர்தல் குறித்து என்ன முடிவு எடுப்பது என்று தெரியாது திகைப்பில் ஆழ்ந்துள்ளனர்.

தமிழ் நாடு முழுவதிலும், சுமார் ஒரு லட்சம் ரசிகர் மன்றங்கள் ரஜனிகாந்துக்கு உள்ளன. அவற்றில் 51 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட ரசிகர்கள் பெருமளவில் உள்ளனர்.

அவர்களின் ஒத்துழைப்பை அடைய ரஜனியின் ஆதரவை அ.தி.மு. கவைத் தவிர மற்றைய கட்சிகள் நாடி நிற்கின்றன.

அ.தி.மு.கவுடன் த.மா.கா கூட்டுச் சேர்ந்ததும், தி. மு. கவை விட்டு ம. தி மு.க. பிரிந்ததும் ரஜனியை வேதனையடையச் செய்துள்ளதாக அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஆதரவு கேட்டு கட்சித் தலைவர்கள் தொந்தரவு செய்வதைத் தவிர்க்க ரஜனி வெளிநாடு செல்லத் தயாராகி வருகிறார் என்று கூறப்படுகிறது. (ஒ)

# ‘எய்ட்ஸ்’ மருந்து தொடர்பான சட்டப் போராட்டத்துக்கு முடிவு

ஜோகனஸ் பேர்க், ஏப். 23

'எய்ட்ஸ்' நோயைக் கட்டுப்படுத்தும் பொது மருந்துகளை இறக்குமதி செய்வது என்ற தென் ஆபிரிக்க அரசின் முடிவை சட்டரீதியாக எதிர்த்து உலகின் முன்னணி மருந்து நிறுவனங்கள் நீண்டகாலமாக நடத்தி வந்த சட்டப் போராட்டத்தை கைவிட்டுள்ளன.

பொதுமக்கள், சமூக அமைப்பினர் போன்றோரின் நெருக்குதல்களையடுத்தே அவை இந்த முடிவுக்குத் தள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

'எய்ட்ஸ்' நோய்க்கு எதிரான மருந்துகளை மலிவு விலையில் இறக்குமதி செய்ய தென் ஆபிரிக்கா தீர்மானித்திருந்தது. இதனை எதிர்த்து 39 பணக்கார மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் வழக்குத் தொடர்ந்திருந்தன.

தற்போது அவை அந்த வழக்கை கைவிட்டு விட்டன. எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்கு இந்த முடிவு சாதகமாகும். அவை தமக்குத் தேவையான மருந்துகளை மலிவாகத் தரும் நிறுவனங்களிடம் இனிமேல் பெற்றுக் கொள்ள முடியும்.

# உலகின் மிகப்பெரிய கடல் முத்து

உலகின் மிகப் பெரியதாகக் கருதப்படும் கடல் முத்து, மியான்மரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த 845 காரட் முத்து அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பெரியதாகக் கருதப்பட்ட 450 காரட் முத்து 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டெடுக்கப்பட்டு தற்போது பிரிட்டன் அரும்காட்சியகத்தில் உள்ளது. (ஒ)

# குத்துச்சண்டையில் புதிய சம்பியன்

ஜோன்ஸ்பேர்க், ஏப். 23

அமெரிக்காவின் ஹஸீம் ரெய்ஹ்மான் அதிபார குத்துச் சண்டைப் போட்டியில் புதிய உலக சம்பியன் ஆகியுள்ளார்.

நேற்று தென்னாபிரிக்காவின் ஜோகானர்ஸ் பேக்கில் இடம்பெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் ரெய்ஹ்மான் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

அந்தப் போட்டியில் இதுவரை தோற்கடிக்கப்படாத உலக சம்பியனான லியோனக்ஸ் லெவிக்ஸை 'நொக் அவுட்' முறையில் ரெய்ஹ்மான் வீழ்த்தினார்.

20—1 என்ற புள்ளிகளில் பின் தங்கியிருந்த ரெய்ஹ்மான் 5 சுற்று ஆரம்பித்த இரண்டரை நிமிடத்தில் லெவிக்ஸை வீழ்த்தினார்.

குத்துச் சண்டை வரலாற்றில் இந்த வெற்றி எதிர்பாராத வெற்றி என்று கருதப்படுகிறது.

## ஆலயத்துக்குப் புதிய சிற்பத் தேர்

யாழ்ப்பாணம், ஏப். 23
கரவெட்டி—கப்புதூ ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் சிற்பத் தேர் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அந்திர மரபு முகபத்திர வடிவில் அமைக்கப்பட்டுவரும் இந்தச் சிற்பத்தேரை புத்தூர் ஸ்ரீகாளிகா சிற்பாலயத்தின் ஸ்தபதியார் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ செ. பாலச்சந்திரன் ஆச்சாரியார் குழுவினர் அமைத்து வருகின்றனர். (க-7)

# மரண அறிவித்தல்கள்

## வயிரமுத்து கிருஷ்ணபிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட வயிரமுத்து கிருஷ்ணபிள்ளை நேற்று (22-04-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் பத்மலோஜனி, கமலலோஜனி, நிமலலோஜனி, புஸ்பலோஜனி (ஆசிரியர், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), மீனலோஜனி, வைகுந்தநாதன் (காங்கேசன் சிமெந்துக் கூ.தா. — பசுபதி களஞ்சியம், கோண்டாவில்), செந்தில்நாதன் (வதனா களஞ்சியம், நந்தாவில் அம்மன் கோயிலடி, கொக்குவில்), சிறிதரன் (துர்க்கா களஞ்சியம், பொற்பதி, கொக்குவில்), முரளிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், பாலச்சந்திரன் மற்றும் வாமதேவன், மகேந்திரராஜா, மகேந்திரன், றஞ்சினிதேவி, தவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்லம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆறுமுகராசா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சுபநாதன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலகம்), சுகுமார், திலகநாதன், குகநாதன், சஜநாதன், மதனசொரூபா, அஜிதா, கெங்காதரன், சுரேஸ்குமார், கோகுலன், விதுஷா, அர்ஷன், சதீஸ், கஜலட்சி, கீர்த்தனா, நிரோஷன், றனஜியா, சர்வஜனனி ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-4-2001) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் (பழைய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
- குடும்பத்தினர்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி/16404)

## சுப்பையா சுப்பிரமணியம்

இருபாலை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா சுப்பிரமணியம் 21-4-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கனகமணியின் அன்புக் கணவரும் ஆனந்தராஜா (பிரான்ஸ்), செந்தில்ராஜா (கால்நடைத் திணைக்களம், திருநெல்வேலி), மோகனராஜா (ஜேர்மனி), விமலராஜா (ஜேர்மனி), ஜெயராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தனராணி, சாரதா, விமலாதேவி (ஜேர்மனி), தயாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் குகானந்தன், தீபானந்தன் (பிரான்ஸ்), நிவேதா, செந்துயன், சிந்துஜா, செங்கயன், ஜேர்மனியில் உள்ள சுமங்கலி, சுபாஸ், தர்சிகா, கோசலியா, தனுசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25-04-2001) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
செந்தில்ராஜா (செல்வம்)
(மகன்)

அரசடி வீதி, இருபாலை,
கோப்பாய்.

(86980)

## திருமதி சிவபூஷணம் அருமைநாயகம்
(ஓய்வு பெற்ற அதிபர், யா/சக்தியம்மன் பாடசாலை, சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு, டச்சு றோட்டைச் சேர்ந்த திருமதி சிவபூஷணம் அருமைநாயகம் நேற்று (22—04—2001) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் மீனாட்சி ஆகியோரின் அன்பு மகளும் அருமைநாயகம் (இளைப்பாறிய அதிபர், புகையிரத நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும் இஷ்யந்தன், சுபாங்கினி (ஆசிரியை, யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை), தர்ஷினி, வருணன் (மாணவன், சாவ. இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-04-2001) திங்கட்கிழமை பகல் 12-00 மணியளவில் இந்திரஅம்மன் கோயிலடி, துன்னாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சு. சரவணமுத்து
(சகோதரன்)

தற்காலிக முகவரி:–
இந்திர அம்மன் கோயிலடி,
துன்னாலை.

(86676)

# தந்தை செல்வா நூற்றாண்டு விழா

# போட்டி முடிவுகள் வெளியாகின

## புதனன்று பல்கலைக்கழகத்தில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 23
தந்தை செல்வாவின் நினைவு தினத்தை ஒட்டிய நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன.

அன்று காலை 9.30 மணியளவில் தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்திருக்கும் நினைவுத் தூபியில் நினைவு நாள் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அன்று பிற்பகல் 2.30 மணிக்கு தந்தை செல்வா நூற்றாண்டு கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கலும் நினைவுப் பேருரையும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளன.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் சு. ஜெபநேசன் 'தந்தை செல்வாவின் காலமும் கருத்தும்' என்னும் தலைப்பில் பேருரையாற்றுவார்.

கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் அங்கு வழங்கப்படும்.

தந்தை செல்வா நினைவுத் தேசிய அவை, தந்தை செல்வா அறங்காவற்குழு ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

போட்டிகளில் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:—

### தேசிய மட்டம் திறந்த போட்டி

கட்டுரை

★ முதலாம் இடம்:- மாணிக்கம் வெற்றிவேல் (வட்டுக்கோட்டை)

★ 2ஆம் இடம்;- நா. க. சண்முகநாதபிள்ளை (யாழ்ப்பாணம்)

★ 3ஆம் இடம்:- ஜனாப் கெ. ஏ. அஷ்ரப் (நிந்தாவூர்)

கவிதை

★ முதலாம் இடம்:- நா. க. சண்முகநாதபிள்ளை (யாழ்ப்பாணம்)

★ 2ஆம் இடம்:- ப. க. குகதாசன் (நயினாதீவு)

★ 3ஆம் இடம்:- ஆ. முரளீஸ்வரன், (மட்டக்களப்பு).

### தேசிய மட்டம் மாணவர்களுக்கு இடையிலான போட்டி

கட்டுரை

★ முதலாம் இடம்:- கு. செந்திபன் (வவுனியா)

★ 2ஆம் இடம்:- செல்வி காமினி தம்பையா (யாழ்ப்பாணம்)

★ 3ஆம் இடம்:- செல்வி ஜரின் சுபத்திரா ஜீவரட்ணம் (யாழ்ப்பாணம்)

கவிதை

★ முதலாம் இடம்:- கிருஷ்ணபிள்ளை குருபரன் (யாழ்ப்பாணம்)

★ 2ஆம் இடம்:- ஜெகான் தர்மேந்திரா (வவுனியா)

★ 3ஆம் இடம்:- வீ. வசந்தராசா (கல்முனை)

### மாவட்ட மட்டம் திறந்த போட்டி

கட்டுரை

★ முதலாம் இடம்:- எஸ். சகாயசீலன் (கோப்பாய்)

★ 2ஆம் இடம்:- திருமதி பி. பிலோமினா மேரிறோஸ் (யாழ்ப்பாணம்)

★ 3ஆம் இடம்:- அன்ரனி உதயகுமார் (யாழ்ப்பாணம்)

கவிதை

★ முதலாம் இடம்:- எம். சிதம்பரநாதன் (தொல்புரம்)

★ 2ஆம் இடம்:- அராலி பரமேஸ்வரசர்மா

★ 3ஆம் இடம்:- க. த. ஞானப்பிரகாசம் (கொடிகாமம்)

### மாவட்ட மட்டம் மாணவர்களுக்கான போட்டி

கட்டுரை

★ முதலாம் இடம்:- செல்வி சசிரேகா சிங்கராசா (அச்சுவேலி)

★ 2ஆம் இடம்:- சி. பத்மநாதன் (புத்தூர்)

★ 3ஆம் இடம்:- செல்வி கவிதா செங்கேணி (வண்ணார்பண்ணை)

கவிதை

★ முதலாம் இடம்:- லதிஸ்லாஸ் அமலானந்தகுமார் (யாழ்ப்பாணம்)

★ 2ஆம் இடம்:- ஜரின் சுபத்திரா ஜீவரட்ணம் (யாழ்ப்பாணம்) (ஐ-3)

## கந்தரோடை ஆலயத்தில் திருட்டு

வலிகாமம், ஏப். 23
கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்தில் கடந்த வியாழன் இரவு திருடர்கள் உட்புகுந்து பெறுமதிமிக்க பல பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஆலயக் கதவின் பூட்டை உடைத்து உட்புகுந்தவர்கள் அம்மன் மற்றும் விக்கிரகங்களை பெயர்த்து அவற்றின் அடியில் வைக்கப்பட்ட பவுண் தகடு மற்றும் கிரீடம், அங்கிகள் போன்ற பெறுமதிமிக்க பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். (க-152)

## விடைத்தாள் மதிப்பீட்டுக்கான கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, ஏப். 23
கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்தவர்களுக்கான கொடுப்பனவுகள் பரீட்சை திணைக்களத்தினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது மேற்பார்வையாளராகவும், நோக்குநர்களாகவும் கடமையாற்றியவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவில்லை.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை கடந்த வருடம் டிசெம்பர் மாத முற்பகுதியிலும், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இவ் வருடம் ஜனவரி மாத முற்பகுதியிலும் நடைபெற்றன.

(ஐ-152)

## சுருட்டுத் தொழிலாளரின் சம்பளம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23
அடுத்த மாதம் முதல் சுருட்டுத்தொழிலாளர்களுக்கு ஆயிரம்சுருட்டுக்கு 300 ரூபா என்ற வீதத்தில் சம்பளம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்தசனிக்கிழமை நடந்த சங்கத்தின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நாட்டுச் சூழ்நிலைகாரணமாகவும் போக்குவரத்து சிரமம் காரணமாகவும் தென்பகுதிக்கு உற்பத்திப் பொருளை அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் தொழிலாளர்களின் நன்மை கருதி சம்பள உயர்வை வழங்க முடிவுசெய்துள்ளோம் என்று சங்கம் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா தங்கலட்சுமி
(ஓய்வுபெற்ற ஆசிரியை, அரியாலை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா தங்கலட்சுமி நேற்று (22—04—2001) ஞாயிற்றுக்கிழமை தற்காலிகமுகவரியான மானிப்பாயில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் சி. இராசையா (ஓய்வு பெற்ற அதிபர், வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் மகேசன் (கனடா), காலஞ்சென்ற பவானி, ராதாதேவி, சிறீதரன், சண்முகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரட்ணசுந்தரம் (ஓய்வு பெற்ற இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம்), செ. பத்மநாதன் (முன்னாள் அரச அதிபர், யாழ்ப்பாணம்), மகேஸ்வரி, கமலா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் பவான், கலைமதி, மயூரன், ஆரூரன், வாணி, துவாரகன், யாழினி, தர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23—04—2001) திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சிறீதரன் (மகன்)

தற்காலிக முகவரி:–
26, கனகசபை வீதி,
மானிப்பாய்.

நிரந்தர முகவரி:-
A. V. றோட்,
அரியாலை.

(86982)

# UNIVAC

**Computer Instructor** இற்கான 6 மாத விசேட பயிற்சிநெறி ஒன்றினை எமது நிறுவனம் வழங்கவுள்ளது. இந்தப் பயிற்சி நெறிக்கான அடிப்படைத் தகைமையாக **M.S Office** கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். பயிற்சி முடிவில் தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

**(மாணவர்கள் 26.04.01 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு எமது நிறுவனத்தில் சமுகமளிக்கவும்.)**

**K.K.S. Road, Jaffna.** (86972) **PointPedro Road, Atchuvely.**


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலையத்தின் நிர்வாகியும் ஆசிரியருமான

**திரு.சு.சுபநாதனின்** அன்புப் பேரனார்

## வைரமுத்து கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் மறைவையிட்டு துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மானிப்பாய் வீதி,*
*ஆறுகால்மடம்.*

**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**யாழ்.கல்வி நிலையம்.**

(C/16406)

# மரண அறிவித்தல்கள்

## சின்னர் கணபதிப்பிள்ளை

**(மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு)**

மருதங்கேணி தெற்கு, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சின்னர் கணபதிப்பிள்ளை அவர்கள் 21-04.2001 சனிக்கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புக் கணவரும் சின்னத் தங்கம்(பிரதம தாதி, மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி), சிவஞான சுந்தரம்(ஜேர்மனி), பரமேஸ்வரி(மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மகேந்திரராசா(செயலாளர், பிரதேச சபை, பூநகரி), புஸ்ப லோஜினி(ஜேர்மனி), திரவியநாதன்(எழுதுநர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், மருதங்கேணி) ஆகியோரின் மாமனாரும் வாஜினி, அமலன், கோசலை(மத்திய கல்லூரி, கிளிநொச்சி), சகானா(ஜேர்மனி), செல்வகுமணன் (தரம் 11), ரமணன்(ஆண்டு 8), அஜந்தனா(ஆண்டு 2) புற்றளை மகாவித்தியாலயம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக வதிவிடமான ஒல்லை, புலோலி தெற்கு, உடயகதிர்காமத்தில் நேற்று (22.04.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ.திரவியநாதன் (மருமகன்)

நிரந்தர முகவரி:
*ஆஸ்பத்திரி வீதி,*
*மருதங்கேணி தெற்கு,*
*தாளையடி.*

தற்காலிக முகவரி:
*ஒல்லை,*
*புலோலி தெற்கு, பருத்தித்துறை*

(C/16407)

## சின்னத்தம்பி மார்க்கண்டு

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மார்க்கண்டு நேற்று (22.04.2001) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, கெங்கேஸ்வரன் (தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம், யாழ்ப்பாணம்), கமலாம்பிகை, சகுந்தலாதேவி (கிளிநொச்சி), நவநாயகம், கனகநாயகம் (கூட்டுறவுக்கிளை முகாமையாளர், சுன்னாகம்), வினிதா, கிருஷ்ணகுமாரி (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்) ஆகியோரின் தகப்பனாரும், செல்லத்துரை, பொன்னுத்துரை, மகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற நாகம்மா, பூபாலசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும், இரத்தினம், கிருஷ்ணவேணி, செல்வரத்தினம், சிவதாஸ், மணிமஞ்சுளா ஆகியோரின் மாமனாரும், உஷா, சுபா, உதயன், உஷாந்தன், சுதர்சன், சிந்துஜா, மனோஜா, ஜஸ்ஷாபினி, சூஷாந்தி, பிரகாஷ், ராயு, பிரவீனா, சாளினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*மடத்தடி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

(C/16409)

தகவல்:
மா.கெங்கேஸ்வரன்
(மகன்)

## செல்வி உமா செல்லத்துரை

அல்வாய் வடக்கு சத்திரந்தை கணேசபதியைச் சேர்ந்த செல்லத்துரை உமா அவர்கள் நேற்று (22-04-2001) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் செல்லத்துரை(தொழில் திணைக்களம்), தர்மவதி தம்பதிகளின் அன்பு மகளும், செல்லக்குமார்(லண்டன்), பாலகுமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவரங்கால் மு.பரமசிங்காரம், மு.அற்புதசிங்கம், மு.சிவநாதன்(லண்டன்), ப.கமலா, அ.இராஜேஸ்வரி, சி.மனோகரி, காலஞ்சென்ற மு.சின்னத்துரை, பிள்ளையம்மா, இரத்தினம், சின்னப்பிள்ளை ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற, கணேசமூர்த்தி, லக்ஷ்மி ஆகியோரின் மருமகளும் மதிவதனி, யோகினி, தயாளன்(லண்டன்), அமுதினி, நந்தினி, சாந்தினி, மீனா, பவித்திரா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் தேவேந்திர ராஜா(அதிபர்), உமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23.04.2001) திங்கட்கிழமை முப. 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கணேசபதி'*
*அல்வாய் வடக்கு,*
*சத்திரந்தை.*

(C/16408)

தகவல்:
மு.பரமசிங்காரம்
(சிறிய தந்தை)

# யுவதி கிணற்றுக்குப் பலி

தென்மராட்சி,ஏப்.23

குளித்துக் கொண்டிருந்த வேளையில் வலிப்பு ஏற்பட்டு கிணற்றுக்குள் வீழ்ந்து இளம்யுவதி பலியானார். அவரைக் காப்பாற்றுவதற்காக கிணற்றுக்குள் பாய்ந்த தாயார் அயலவர்களால் மீட்கப்பட்டார்.

கடந்த வெள்ளியன்று காலை கரவெட்டி கோவில் சந்தையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை, அல்லாரை வடக்கைச் சேர்ந்த உலகநாதன் தயா(வயது17) என்னும் யுவதியே பலியானவராவார்.

இவரது சடலம் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் பிரேத பரிசோதனை நடத்தினார். வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியன் மரண விசாரணை செய்தார். நெல்லியடி பொலீஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

(ஐ-117)

# 6 புலிகள் உயிரிழப்பு

வவுனியா,ஏப்.23

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் 6 பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

☆ லெப்.கேணல் கடம்பன் (மகாலிங்கம் சுரேஷ்குமார்-யாழ்ப்பாணம்)

☆ லெப்.கேணல் பவான் (மகேந்திரராசா மகேஸ்வரன்-யாழ்ப்பாணம்)

☆ லெப்டினன்ட் மகிந்தன் (அந்தோனி வாமதேவன் - கிளிநொச்சி)

☆ 2ஆம் லெப்டினன்ட் வேந்தன் (அந்தோனி லோறன்ஸ்-யாழ்ப்பாணம்)

☆ மேஜர் இசைவிழி (குமாரசாமி வினோதினி - பூநகரி)

☆ 2ஆம் லெப்டினன்ட் நிலாவொளி (இரத்தினம் கோகிலா-யாழ்ப்பாணம்)

(க-7)


## புலமைப்பரிசில் - 2001

**36 ஆவது பரீட்சையில் உயர் புள்ளி பெற்றோர்**

| | | |
|---|---|---|
| ந.திருத்தணிகன் (J.H.P.S) | - | 186 |
| வெ. ஜெயப்பிரசாந் (J.H.P.S) | - | 186 |
| வி.டிலக்ஷன் (S.P.C.) | - | 183 |
| சீ.கோபிகாந்தன் (J.H.P.S) | - | 179 |
| யோ.பிரவீனா (J.K.H.P.S) | - | 179 |
| ப.தனுசியா (J.H.P.S) | - | 179 |

(86981)

**BOND** யாழ்நகர்.

## BARATHY

**சித்தன்கேணி**

**O/L DAY CLASS**

**புதிய பிரிவு ஆரம்பம்:**
**25.04.2001 காலை 8.00 மணி**

எமது தனித்துவமும் திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

*விஞ்ஞானம்:-* **தேவா**
*கணிதம் :-* **S.சிவரூபன்**
*தமிழ் :-* **சின்னத்தம்பி**
*சமூகக்கல்வி:-* **ஜெகன்**
*ஆங்கிலம் :-* **விஜயபாஸ்கர்**
*சமயம் :-* **N.T.தரன்**
*வர்த்தகம் :-* **லோகேஸ்வரன்**
*விவசாயம் :-* **பிரபல ஆசிரியர்**

**புதிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.**

குறிப்பு:-மேற்குறிப்பிட்ட இப் பிரபல ஆசிரியர்கள் சித்தன் கேணியில் வேறு கல்வி நிறுவனங்களில் கற்பிக்கமாட்டார்கள்.

(86977)


# வாசகர் திருமுகம்

## தென்மராட்சி மக்களின் பரிதாப நிலை

அரச அதிபர் அவர்களே! தமிழ் மக்களின் பிரதிநிதிகளே!

கொடிய யுத்த சூழ்நிலையில் உறவினர்களையும் இழந்து சொத்துக்களையும் கைவிட்டு உடுத்த உடையுடன் தரவையூடாக வலிகாமத்திற்கும் வடமராட்சிக்கும் வந்து மிக்க வேதனையுடன் தஞ்சமடைந்து இருக்கும் நாம் சில நாள்களுக்கு முன் இழந்த பொருள்களை மீட்பதற்கு இராணுவத்தால் வழங்கும் அனுமதியைப் பெறுவதற்காக ஆயிரக்கணக்கானோர் கொடிகாமம் சென்று பத்து பதினைந்து நாள்களாக தவம் கிடந்தும் கூட செல்வாக்கு உள்ள சிலரும் சிறு அதிர்ஷ்டம் உள்ள சிலரும் அனுமதியைப் பெற்று பொருள்களை மீட்டு வந்தனர். ஏனையோரின் அனுமதி ரத்துச் செய்யப்பட்டதும் மிக்க கவலையுடன் திரும்பினர்.

மேலும் கண்ணிவெடி பரிசோதிக்கும் இராணுவத்தினரின் உதவியுடன் வீட்டுப் பொருள்களை மீட்டிருந்தால் தற்போது சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், சரசாலைப் பகுதிகளுக்கு தரவையூடாகச் சென்று பொருள்களை அபகரிப்போரின் செயலைத் தடுத்திருக்கலாம். தொடர்ந்தும் களவுகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

எனவே முக்கிய ஆவணங்களையும் பெறுமதியான பொருள்களையும் கைவிட்டு வந்த எம் போன்றோர் படும் வேதனையைத் தணிப்பதற்கு அரச அதிபர், அவர்களே தமிழர் பிரதிநிதிகளே பிறந்திருக்கும் தமிழ் - சிங்களப் புத்தாண்டிலே இதற்கு ஆவன செய்வதற்காக ஏற்ற நடவடிக்கையை எடுக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*கொக்குவில் மேற்கு.*

**தென்மராட்சி மக்கள் சார்பில்**
**- பாதிக்கப்பட்டவர் -**

## வீதிகளைச் செப்பனிடுங்கள்

யாழ்.கண்டி வீதியில் செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள வில்வம் தெரு வீதி, விபுலானந்த வீதி, கச்சேரி கிழக்கு ஆகியன குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றன. யாழ்.நகரில் பிரபல்யமான கல்லூரிகள், அரச செயலகங்கள், சுகாதார பிரிவு அலுவலகம் என்பன இந்த வீதிகளுக்கு அருகில் உள்ளன என்பதை யாவரும் நன்கு அறிவர்.

மேலும் கண்டி வீதியில் புங்கன்குள சந்திக்கு அருகில் உள்ள பகுதி பொதுமக்கள் போக்குவரத்திற்கு மூடப்பட்டுள்ளது. புங்கன் குள சந்தியை அண்டிய பிரதேசத்தில் பாரிய இராணுவ முகாம் அமைந்துள்ளது.

கண்டி வீதி போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்து கூடுதலாக இந்த வீதிகளால் நடைபெறுகின்றது. ஆனால் இங்கு குறிப்பிட்ட வீதிகள் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றன. இதனால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர் நோக்க வேண்டியதாய் இருக்கின்றது.

இந்த வீதிகள் 40 வருடங்களுக்கு மேலாக திருத்தி செப்பனிடப்படவில்லை என இந்த வீதிகளில் குடியிருக்கும் மக்கள் உறுதியாக தெரிவிக்கின்றார்கள். ஆகவே இந்த வீதிகளின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு போக்கு வரத்திற்கு உகந்த வீதிகளாக அமைத்துத் தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டி நிற்கின்றேன்.

*அரியாலை.*

**எஸ்.சுந்தரலிங்கம்.**

## அர்த்தமற்ற மின் விநியோகமும் அப்பாவி மாணவர்களும்

யாழ்குடாநாட்டில் திருநெல்வேலிப் பிரதேசமானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடம் என்பது யாவரும் அறிந்ததே. இது கற்றோர் செறிந்து வாழும் இடமாகும். அத்துடன் நீண்டதோர் கல்விப் பாரம்பரியத்தை கட்டிக்காத்துவரும் புத்திஜீவிகள் நிறைந்த பகுதியுமாகும். இதற்கான பிரதான காரணம் பிரபல்யமான பாடசாலைகளும், பல்கலைக்கழகமும், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையும் இப்பிராந்தியத்தில் அமைந்துள்ளமையாகும்.

தூர இடங்களிலிருந்து கல்விசார் நோக்கங்களுக்காக வரும் மாணவர்களை இன்முகத்தோடு வரவேற்று தங்குமிட வசதியும், உணவும் (**FOOD AND LODGING**) கொடுத்து ஊக்கப்படுத்தும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் வாழும் இடம் இது.

பிரயாணச் சிரமங்களைத் தவிர்ப்பதற்காகவும்; கல்வி சார் சூழ்நிலையில் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் தூர இடங்களிலிருந்து இங்கு மாணவர்களின் நிலை மின்சார சபையினரின் சில ஒழுங்கீனங்களினால் பரிதாபகரமாக்கப்பட்டுள்ளது. அதாவது நரியூருக்குப்பயந்து புலியூருக்கு வந்த கதையாகிவிட்டது.

ஒன்று விட்டொரு நாளைக்கு (**ON ALTERNATE DAYS**) மாலை 7மணியிலிருந்து 10மணி வரை மின்சார விநியோகம் இரத்துச் செய்யப்படுகிறது. அதாவது படிப்பதற்குரிய முன்னிரவு நேரம் இருளடிக்கப்படுகிறது. 10மணியின் பின்பு நித்திராதேவி கண்களை தழுவிக் கொள்வது எவருக்கும் தெரிந்த உண்மை.

மேலும் திருநெல்வேலியில் உள்ள பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையின் அயலிலுள்ள ஒரு குறிப்பிட்ட கிராமமானது ஆள் கொல்லிச் சட்டவிரோத உள்ளூர் மதுபான (**MAN KILLING ILLEGAL LOCAL ARRACK**) உற்பத்தியில் கொடிகட்டிப் பறக்கிறது. 7 மணியிலிருந்து 10 மணிவரை இருள் சூழ்ந்திருப்பதால் விற்பனையாளர்களும் பாவனையாளர்களும் டோர்ச் பாக்குப் போடாமலேயே முன்னிரவில் தங்கள் தேவைகளை கச்சிதமாக நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

இருளும் போதையும் இரண்டறக்கலந்த நிலையில் கண்பகை மாறு றான்பகை தெரியாத நிலையில் சில அசிங்கங்களும் அரங்கேறி வருகின்றன. அவசியம் ஏற்படின் இவ்வுற்பத்தி மையங்களின் இடங்கள், உற்பத்தியாளர்களின் பெயர் விவரங்கள், உற்பத்திப் பொருள்களின் மதுசாரச் செறிவு (**Alcoholic density**) என்பவற்றின் விவரங்களை வரைபடம் மூலம் துல்லியமாக என்னால் இனங்காட்ட முடியும். இக் கண்றாவியை அடியோடு ஒழிப்பதற்கு பலம் வாய்ந்த ஓர் இளைஞர் அமைப்பு ஏற்படுத்தப்படுமானால் அதிலிணைந்து உயிரைக் கொடுப்பதற்கும் உயிரை எடுப்பதற்கும் தயாராக உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு அறியத் தருகின்றேன்.

எனவே இக்கொடுமைகளுக்கெல்லாம் காரணமான இந்த மூன்று மணித்தியால மின்வெட்டை மின்சாரசபையினரின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். தருவதை ஒழுங்காகத் தரவேண்டும் அல்லது தராமலேயே விடவேண்டும்.

*திருநெல்வேலி.*

**- யாழ்.வதிரிவாசன்.**

## அரசு - புலிகள் பேச்சில்

# நேரடிப் பங்கு வகிக்க நோர்வே அரசு தயார்!

## தூதர் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

ஒஸ்லோ,ஏப்.23

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கினால் இலங்கை விவகாரத்தில் நேரடிப்பங்கை வகிக்க நோர்வே தயாராக இருக்கிறது என்று நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் 'நோர்வே போஸ்ட்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் தங்கள் அமைப்புக்கும் இடையில் இடம் பெறும் பேச்சுக்களில் நோர்வே நேரடியாகப் பங்கு வகிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்து வெளியிட்டிருந்தார்.

அது தொடர்பாக அவரிடம் கேட்கப்பட்ட போதே எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை அரசுக்கும் தங்களுக்கும் நடைபெறக்கூடிய சமாதானப் பேச்சுக்களில் நோர்வே நேரடியாகப் பங்கேற்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர்.

இது விடயத்தில் இரு தரப்பினரும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவார்களேயானால், அத்தகைய நேரடிப்பங்கை வகிக்கத் தயாராகவிருக்கின்றோம்.

பேச்சுக்களில் நேரடிப்பங்கை வகிப்பதற்கான தேவை இருக்குமானால், அதை விரும்பாமல் இருக்கப் போவதில்லை - என்றார் அவர்.

இனப்பிரச்சினையில் நோர்வேயோ அல்லது வேறு எந்த நாடோ மூன்றாம் தரப்பாகச் செயற்படுவதற்கு இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என்று 'நோர்வே போஸ்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-3)

## அமைச்சர்களுக்கான ஆளணியை குறைப்பதற்கு அரசு தீர்மானம்

### ஆயிரம் பேர் வேலை இழப்பர்

கொழும்பு,ஏப்.23

நிதி நெருக்கடி நிலை காரணமாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் அலுவல்களைக் கவனிக்கும் ஆளணி எண்ணிக்கையைக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்த முடிவினால் சுமார் ஆயிரம் பேர் வேலையிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தமது பணிகளை மேற்கொள்வதற்காக உதவியாளர்களை நியமனம் செய்துள்ளனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் சுமார் ஆயிரம் பேரே வேலை இழக்கின்றனர்.

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தமது உதவியாளர்களாக 34 பேரை நியமித்திருந்தனர். இந்த எண்ணிக்கை 20 ஆகக் குறைக்கப்படுகின்றது.

வேலை இழப்பவர்களுக்கு வேறு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான ஏற்பாடு ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

### ஐ.தே.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிப்பதா என்பது குறிததும் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று கட்சியின் மற்றொரு பிரமுகர் தெரிவித்தார்.

ஆனால் ரணிலின் தலைமைப் பதவிக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்று கட்சியின் சிரேஷ்ட செயற்குழு உறுப்பினர் ஒருவர் கூறினார்.

(ஐ-3)

### கடற்சமர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறது.

சயனைற் வில்லைகளைத் தயாரிக்க அல்லது வேறு இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதற்காகப் புலிகள் இந்த இரசாயனப் பொருளைக் கடத்தி வந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் தற்சமயம் அந்த இரசாயனப் பொருளைப் பகுப்பாய்வு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### இலங்கைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு வழங்க வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே கடற்சண்டை நடைபெற்ற சமயம் கடற்படைத் தளபதி டாக்காவில் தங்கியிருந்தார். அந்தக் கடற்சண்டை தொடர்பான தகவல்களை அவர் அங்கிருந்து தொலைபேசி மூலம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்ஜிதம் செய்துள்ளனர் என்றும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

தினமும் பொருள்கள் இறக்கப்பட்டு நகர்த்தப்பட்டு வருவது பற்றி வன்னியில் மக்கள் மத்தியில் பேச்சடிபடுவதாகவும் -

ஆயுத தளபாடங்களை இடத்துக்கு இடம் நகர்த்தும் பணியில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களைப் புலிகள் ஈடுபடுத்தி வருவதாகவும் -

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து குடும்பத்துடன் வெளியேறி வந்த சிவிலியன் ஒருவர் தன்னிடம் கூறியதாக பிரபல பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்திருக்கிறார்.

அங்கு இடம்பெறும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வெளியிடக்கூடாது என்றும் வன்னியை விட்டு வெளியேறும் சிவிலியன்கள் எச்சரிக்கை செய்யப் பட்டிருப்பதாகவும் அத்தாஸ் தமது கட்டுரையில் எழுதியிருக்கிறார். (ஐ)

### கைதான புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய பெண் உறுப்பினர்களையும்-

புவனேஸ்வரன் மலிஸ் (வயது 21), வைகரன் (வயது 19), ரவி (வயது 19), கந்தன்(வயது 19), கோமேஸ்வரன்(வயது 24) ஆகிய ஆண் உறுப்பினர்களையும் - கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இவர்களில் ஒருவர் பலாலி ஆஸ்பத்திரியிலும் ஏனையோர் திருமலை கடற்படை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-3)

### ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் புலிகளின் பிரதேசங்களில் இன்று எழுச்சிப் பேரணிகளும், எழுச்சிக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. பல இடங்களிலும் அலங்கார வளைவுகள் அமைக்கப் பட்டிருப்பதாகவும் வீதிகள் பொது இடங்கள் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சி அளிப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

ஆனையிறவுத் தளம் வீழ்ச்சியடைந்ததை அடுத்து கடந்த ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதி புலிகளின் கேணல் கிட்டு படையணித் தளபதி கேணல் பானு அங்கு புலிக்கொடியை ஏற்றினார். (ஐ-3)

### யுத்த நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிப்பது - போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டி இம்முறை யுத்த நிறுத்த நீடிப்புச் செய்யக்கூடாது என போராளிகள் தரப்பில் இருந்து தலைமைப் பீடததுக்கு அழுத்தம் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் எடுத்து யுத்த நிறுத்த நீடிப்புக் குறித்து மறுபரிசீலனை செய்யப்படக்கூடும் என்று லண்டனில் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.யுத்த நிறுத்தத்தை இம்முறை நீடிப்பதில்லை என்று விடுதலைப் புலிகள் இன்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கக்கூடும் என்றும் அவை எதிர்பார்க்கின்றன. (அ-3)


SUBRA - 14
சித்தன்கேணி.
2003 - A/L
புதிய பிரிவு
Log. -E.S.பவன்.
Tam. -நாக.தமிழிந்திரன்.
Eco. -S.ஜெயகுமார்.
Hi-Cu. -ஸ்ரீஸ்.
Dra. -A.C.பிரான்சிஸ்.
Geo. -ஐங்கரன்.
A.Cult. -அருந்தவம்.
Hindu. -ஸ்ரீஸ்.
Cri. -அஜந்தா.
ஆரம்பம்:-
இன்று (23.04.2001) திங்கள்.
★ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
(C/16402)

புதிய வீடியோ CD வெளியீடுகள்
விஜயசாந்தி நடித்த
கொமாண்டர் ஜெயந்தி
ராமராஜனின்
சீறிவரும் காளை
குழந்தையின் தெய்வம்
மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்
238, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
T.P.3646

புதிய வீடியோ CD வெளியீடுகள்
ராமராஜன் நடித்த
சீறி வரும் காளை.
S.P.பாலசுப்பிரமணியம் நடித்த
குழந்தையும் தெய்வமும்.
விஜயசாந்தி நடித்த
கமாண்டோ ஜெயந்தி.
இப்படத்தின் போஸ்ரர்கள் உண்டு.
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.றோட், கோண்டாவில்.
(C/16410)

கர்நாடக சங்கீத பிரியர்களுக்கு
ஓர் இனிய நற்செய்தி
M.L.வசந்தகுமாரி - வசந்தா சுதா
உன்னிகிருஷ்ணன் - கிளாசிகல் வோகல்
சுதா ரகுநாதன் - கிளாசிகல் வோகல்
Dr.பாலமுரளிகிருஷ்ணா - கிளாசிகல் வோகல்
காயத்திரி - வீணா வந்தனம்
காயத்திரி - தயா ஜெயசோதி
காயத்திரி - வீணை
சுதா ரகுநாதன் - திருமணப்பாடல்கள்
சுதா ரகுநாதன் - தில்லானா
நித்தியஸ்ரீ - இப்போ வருவாரோ
நித்தியஸ்ரீ - மதுரசங்கமம்
போன்ற ஓடியோ CD களின் பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.
★ பிரதிகள் (UR) 140/-
புதிய ஓடியோ CDகள் விற்பனைக்குண்டு
(பழைய, புதிய பக்திப்பாடல்கள்)
மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.3646
(86970)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சீறி வரும் காளை
குழந்தையும் தெய்வமும்
பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்
15,ஸ்ரான்லி வீதி,
(C/16405) யாழ்ப்பாணம்.

G.C.E. (A/L)
மாணவர்களுக்கு
விசேட கற்கை நெறி ஆரம்பம்
05.05.2001
பிரிவு I :பகல் 10 மணி
பிரிவு II:மாலை 4.30 மணி.
A/L மாணவர்களுக்குப் பயனுள்ள மேற்படி கற்கை நெறியில் இணைந்து உங்கள் கல்வியை இலகுவாக்கிக்கொள்ளுங்கள்
*மேற்படி கற்கை நெறிகள் வார, வார இறுதி நாள்களில் நடைபெறும்.
எமது கருத்தரங்குகளில் பங்குகொண்ட A/L மாணவர்கள் இன்று (23.04.2001) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நிறுவனத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்படுகின்றனர்.
இயக்குநர்.
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/16398)

சகல நிறுவனங்கள்
02,01 A/L தமிழ் - 03
UNIT EXAMS (வாரம்-1)
தொடர் பரீட்சைகள்
நாக தமிழிந்திரன்
உயர் பெறுபேற்றை நாடும் எம் மாணவரும் இணையலாம்
எங்கும் தமிழ்
03 SUBRA - 14 03
(86938)

நிறுவனதினவிழா - 2001
நிறுவனத்தின் நிறுவனதின விழா மே மாதம் 7ஆம் திகதி திங்களன்று இடம்பெறவுள்ளதால் அத்தினத்தில் சான்றிதழ் பெறவிருக்கும் கல்வியாண்டு 2000/2001 இற்குரிய மாணவர்களை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
இயக்குநர்.
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/16389)


## மரண அறிவித்தல்

### செல்வி பொ.செல்வமலர்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி பொன்னையா செல்வமலர் நேற்று (22..04.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா (ஆயுள்வேத வைத்தியரும் இளைப்பாறிய ஆசிரியரும்) - பூரணம் ஆகியோரின் மகளும் செல்லம்மா, செல்வமணி, பாலசுப்பிரமணியம் (நியூசிலாந்து), செல்வநாயகி (ஆயுள்வேத வைத்தியர்), செல்வராணி (ஜேர்மனி), பாலச்சந்திரன் (தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், ஆனந்தசுந்தரம், விமலா (நியூசிலாந்து), பூபாலசிங்கம் (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), சிவசோதி (ஜேர்மனி), யோகேஸ்வரி (நாவற்குழி மகா வித்தியாலயம்), ஆகியோரின் மைத்துனியும் சுஜிதா, சுரேந்திரா, இரத்தினாம்பாள், நிதர்சன், மயூரி ஆகியோரின், சிறிய தாயாரும் பிரவீனா, பிரசானா, நிருயன், யதீசன், ஆகியோரின் மாமியாரும் வைத்திலிங்கம் இராசலட்சுமி, ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.04.2001) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*கேரதீவு வீதி,*
*நாவற்குழி.*

தற்காலிக முகவரி:
*ஆடியபாதம் வீதி,(சந்தை முன்பாக)*
*திருநெல்வேலி.*

தகவல்:
பொ.பாலச்சந்திரன்.
(சகோதரன்)

T.P. - 2963

(C/16411)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.